பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2050 | மார்கழி 19 சனிக்கிழமை 04.01.2020 | கதிர் 60

## இது ரகசியம் அல்ல!

நேற்று மாலை எனக்குத் தலை வெடித்துவிடும்போல இருந்தது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மாவட்டங்களில் போட்டியிடுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இடையே உடன்பாடு – இணக்கம் –கண்டு விட்டோம்

பக்கம் 02 »

# கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடு சுமுகமாக முடிவு

## நேற்று ஒருங்கிணைப்புக் குழுவின் கொழும்புக் கூட்டத்தில் இணக்கம்

யாழ்ப்பாணம், ஜனவரி 04

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களில் போட்டியிடுவது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் ஆசனப்பங்கீடு விவகாரத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் திருப்தி தரும் விதத்தில் இணக்கம் எட்டப்பட்டிருக்கின்றது.

நேற்று மாலை கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்ற பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில் இந்த இறுதி இணக்க நிலை எட்டப்பட்டதாக கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பக்கம் 03 »

# ஒற்றையாட்சியை என்றும் காப்பேன்!

## நாடாளுமன்றில் கோட்டா உறுதிமொழி அரசமைப்பும் மாற்றப்படும் என்கின்றார்



கொழும்பு, ஜன. 04

பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புகளை நாம் என்றும் மதிக்க வேண்டும். அப்போதுதான் மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்க முடியும். எமது நாட்டின் உன்னதமான அரசமைப்பின்படி எனது பதவிக் காலத்தினுள் நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாப்பேன். புத்தசாசனத்தைப் பாதுகாத்துப் போஷிப்பேன். அதேபோன்று எந்தவொரு குடிமகனையும் தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரத்தை எப்போதும் காப்பேன்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்றில் உறுதி கூறினார்.

பக்கம் 03 »

## தொண்டமனாறு நீரேரியில் இளைஞன் சடலமாக மீட்பு



யாழ்ப்பாணம், ஜன. 04

தொண்டமனாறு கடல் நீரேரியில் குளித்துக் கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பக்கம் 03 »

## எதிர்க்கட்சி தலைவராக சஜித் சபாநாயகர் நேற்று அறிவிப்பு



கொழும்பு,ஜன.05

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவராக சஜித் பிரேமதாச சபாநாயகர் கருஜயசூரியவால் அறிவிக்கப்பட்டுள்ளார்.

8 ஆவது பாராளுமன்றத்தின்

பக்கம் 02 »

## சம்பந்தனிடம் சுக நலம் விசாரித்தார் கோட்டா!



கொழும்பு,ஜன.04

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நாடாளுமன்றில் சந்தித்து நலம் விசாரித்தார்.

இதன்போது தமிழ்

பக்கம் 03 »

## அன்று – மஹிந்தவின் வருகையும் நேற்று – கோட்டாவின் வருகையும்



கொழும்பு. ஜன.04

எட்டாவது நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை தாங்கி ஆரம்பித்து வைத்தார்.

இதன்போதுநாடாளுமன்றுக்கு கோட்டாபய வருகைத்தந்த விதம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

பக்கம் 03 »

## நாடாளுமன்றம் ஜன.7 இல் கூடும்

கொழும்பு, ஜன. 04

நாடாளுமன்றம் மீண்டும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின்

பக்கம் 02 »

## பயங்கரவாத எதிர்ப்பு வரைவை மீளப் பெறுவதற்கு அரசு முடிவு!

கொழும்பு, ஜன. 04

மைத்திரி–ரணில் அரசு நாடாளுமன்றில் முன்வைத்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை மீளப்பெறுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பக்கம் 03 »

## புங்குடுதீவில் பச்சிளம் பாலகன் கிணற்றினுள் வீசிப் படுகொலை

யாழ்ப்பாணம், ஜன. 04

புங்குடுதீவில் தொப்புள் கொடியோடு பச்சிளம் குழந்தையொன்று கிணற்றுக்குள் வீசப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

2ஆம் வட்டாரத்தில்

பக்கம் 03 »

## ஜனாதிபதியின் தேநீர் விருந்தை புறக்கணித்தனர் ஜே.வி.பியினர்





கொழும்பு,ஜன.04

நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் அக்கிராசன உரையைத் தொடர்ந்து, தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற சிற்றுண்டிச் சாலையில் நடந்த இந்த விருந்தில் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சி

பக்கம் 03 »

# ஜனாதிபதி கோட்டாபயவின் கொள்கை விளக்கத்தில் தமிழர்களுக்குப் பிரச்சினை இருப்பதாகவே இல்லை!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. விசனம் தெரிவிப்பு



**ஜனாதிபதியின் நேற்றைய கொள்கைப் பிரகடன உரையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை தொடர்பாகவோ அதற்கான தீர்வுகள் தொடர்பாகவோ எந்த விடயமும் குறிப்பிடப்டால் இருந்தமை கவலையளிக்கின்றது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை நாடாளுமன்ற எதிர்க்கட்சிக் காரியாலயத்தில் சந்தித்தி கலந்துரையாடியமை தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஒற்றையாட்சிக்கான நிகழ்ச்சி நிரல், பௌத்த மதத்தை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் அவரது பேச்சில் இருந்தன. ஆனால் ஏனைய மதங்கள் தொடர்பாகவோ அவற்றுக்கு இருக்கும் பிரச்சினை தொடர்பாகவோ எந்த விடயமும் பேச்சில் இருக்கவில்லை. இனங்களுக்கான பிரச்சினைகளைத் தள்ளிவைத்து விட்டு நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் இணைந்து செயற்படவேண்டும் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஆனால், தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்ந்தும் நீறு பூத்த நெருப்பாகவே இருந்து வருகின்றது. அதனால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக எதுவும் ஜனாதிபதியின் உரையில் இல்லாமல் இருந்தமை கவலைக்குரிய விடயமாகும். – என்று அவர் மேலும் கூறினார்.

# பதுளையில் ஏழு கடைகள் திடீரெனத் தாழிறங்கியுள்ளன



பதுளையில் ஏழு வர்த்தக நிலையங்கள் தாழிறங்கியுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பதுளை – வெலிமடை வீதி, உமாஓயா ஆற்றுப்படுக்கைக்கும் பிரதான வீதிக்கும் இடையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வர்த்தகத் தொகுதியில், பதுளை –பண்டாரவளை பஸ் நிறுத்தும் நிலையத்துக்கு அருகிலுள்ள வியாபார நிலையங்களே, இவ்வாறு திடீரெனத் தாழிறங்கியுள்ளன.

இது குறித்து வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்–

இந்நகருக்குக் குடி தண்ணீரை விநியோகிக்கும் நீர்க் குழாய்கள், தமது கடைத் தொகுதிக்குக் கீழாகச் செல்வதால் அடைமழை காரணமாக அவற்றில் பாரிய வெடிப்பு ஏற்பட்டு அதிக நீர் வெளியேறியது என்றும் இதனால், வீதியின் ஒரு பகுதி தாழிறங்கி வர்த்தக நிலையங்களும் தாழ் இறங்கியுள்ளன என்றும் குறிப்பிட்டனர்.

உரிய நேரத்தில் நீர்வழங்கல் அதிகார சபையினர் நீர் வெளியேற்றதை முற்றாகத் தடை செய்தமையால் பாரிய இழப்புகள் தவிர்க்கப்பட்டன எனவும், தொடர்ந்தும் இந்த வர்த்தக நிலையங்களில் வர்த்தக நடவடிக்கையை முன்னெடுக்க அச்சமாகவுள்ளது எனவும், இப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்றை, அரசும் பிரதேச செயலகமும் பெற்றுத்தர வேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்

## எதிர்க்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

4 ஆவது அமர்வு நேற்றுக் காலை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் கூடியதுடன் ஜனாதிபதியின் அக்கிராசன உரையைத் தொடர்ந்து பிற்பகல் 1 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

பின்னர் மீண்டும் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் சபை கூடிய போது எதிர்க்கட்சி தலைவராக சஜித் பிரேமதாச அறிவிக்கப்பட்டார்.

அதேவேளை எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கிராசன உரையின் பின்னர் நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்குக் கூடியது.

அப்போது கோப் விசாரணைக்குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர்.

ரஞ்ஜித் சொய்சாவின் மறைவையடுத்து இரத்தினபுரி மாவட்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினராக வருண பிரியந்த லியனகே சபையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதனையடுத்து நாடாளுமன்ற அமர்வு மீண்டும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# ரணில் யுகம் வீழ்ச்சி!

## இப்போது அவர் சாதரண எம்.பி.

கடந்த 42 வருடங்களாக நாடாளுமன்றத்தில் பிரதி அமைச்சர், அமைச்சர், பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் என்ற அந்தஸ்துடன் இருந்து வந்த ரணில் விக்கிரமசிங்க, நேற்று முதல் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ளார்.

ரணில் யுகத்தின் வீழ்ச்சியென இது கருதப்படுகிறது.

நேற்று எதிர்க்கட்சி தலைவராக சஜித் பிரேமதாஸ பெயரிடப்பட்டமையைத் தொடர்ந்து, கடந்த 42 வருடங்களைப்பிரதி அமைச்சர், அமைச்சர் பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் என்ற அந்தஸ்துடன் கழித்து வந்த ரணில் விக்கிமசிங்க, சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ளார்.

1977 இல் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்த ரணில் அப்போது பிரதி வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார். பின்னர் கல்வி அமைச்சர் உட்பட பல அமைச்சுப் பதவிகளை வகித்தார்.

1993 இல் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மரணத்திற்குப் பிறகு, அப்போதைய பிரதமர் டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். ரணில் பிரதமரானார்.

1994 பொதுத் தேர்தலில், ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க தோல்வியடைந்தது. சந்திரிகா தலைமையிலான சுதந்திரக் கட்சி அரசு அமைந்தது.

அப்போது ஐ.தே.கவை விட்டு வெளியேறிய காமினி திசாநாயக்க, பின்னர் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். அதே ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பேரணியில் நடந்த குண்டு வெடிப்பில் காமினி திசாநாயக்க கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும், நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க இரண்டாவது முறையாகவும் வெற்றியடைந்தார். ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தார்.

2000 பொதுத் தேர்தலில் ஐ.தே.க மீண்டும் தோல்வியடைந்தது. அப்பொழுது ரணில் எதிர்க்கட்சி தலைவரானார்.

2001பொதுத் தேர்தலில் 109 ஆசனங்களை கொண்ட கூட்டணி அரசாங்கத்தை அமைத்து ரனில் விக்கிரமசிங்க இரண்டாவது முறையாக பிரதமரானார.

2004இல் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாடாளுமன்றத்தை கலைத்து, மீள தேர்தலை நடத்தினார். அதில் ஐ.தே.க தோல்வியடைந்தது. ரணில் மிள எதிர்க்கட்சி தலைவரானார்.

2005 ஜனாதிபதி தேர்தலில் ரணில் தோல்வியடைந்தார். 2010 நாடாளுமன்ற தேர்தலில் ஐ.தே.க தோல்வியடைய மீளவும் எதிர்க்கட்சி தலைவரானார்.

2015 ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றியடைந்ததை தொடர்ந்து, பிரதமராக நியமிக்கப்பட்டார். பின்னர் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றியடைந்து, பிரதமரானர்.

2018 ஒக்ரோபர் 26ம் திகதி அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால அதிரடியாக செயற்பட்டு, ரணிலை பிரதமர் பதவியிலிருந்து நீக்கினார். எனினும், நாடாளுமன்றம் கலைத்தது அரசமைப்பிற்கு விரோதமானது என்று உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக 2018 டிசம்பர் 16 அன்று நியமிக்க வேண்டியிருந்தது.

2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததால், ரணில் பிரதமர் பதவியை துறந்தார்.

இந்த காலப்பகுதியில் ஐ.தே.கவிற்குள் ரணிலின் தலைமைத்துவம் ஆட்டம் கண்டு, சஜித் ஜனாதிபதி வேட்பாளராகியிருந்தார். ரணில் பிரதமர் பதவியை துறந்த பின்னர், எதிர்க்கட்சி தலைவராக முயன்றார். எனினும், கட்சிக்குள் அவரது தலைமைத்துவம் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில், தவிர்க்க முடியாமல் சஜித்தை எதிர்க்கட்சி தலைவராக அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இலங்கை அரசியலில் ரணில் எனும் அரசியல் நாமத்தின் வீழ்ச்சியாக இது கருதப் படுகிறது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், மேல் விவரங்களைக் கூற மறுத்துவிட்டார்.

*“உடன்பாடு–இணக்கம்–கண்டாகிவிட்டது என்பதை மட்டுமே இப்போதைக்கு மக்களுக்குத் தெரிவிப்பது என முடிவு செய்துள்ளோம். ஆசன ஒதுக்கீடு என்ன என்பது குறித்து எதுவும் வெளியிடுவதில்லை என முடிவு செய்திருக்கின்றோம்”* – என்று வழமைக்கு மாறாக வலு கறாராகப் பதில் சொன்னார் அவர்.

*“சரி. உத்தியோகபூர்வமாகச் சொல்லவேண்டாம். ‘ஓவ் த ரெக் கோர்ட்’ ஆகச் சொல்லுங்கள்”*–என்றுசற்றுநோண்டினேன். ஆனால் அவரோ அசைந்து கொடுக்கவில்லை *“இப்போதைக்கு அவ்வளவுதான் வெளியிடுவது எனத் தீர்மானித் திருக்கின்றோம்”*– என்று சடாரெனப் பதில் தந்தார்.

*‘அப்படியா? நல்லது!’*– என்று தொலைபேசி அழைப்பை முடித்தேன்.

ஏதோ இந்த விடயத்தைத் தேடி, நோண்டி எடுத்து வெளிப்படுத்தாவிட்டால் தலையே வெடித்துவிடும் என்பது போல ‘பத்திரிகையாளன் நோய்’ எனக்குள் தொற்றிக் கொண்டது.

அந்தச் செய்தியை அமுக்கி வாசிப்பதற்கு சுமந்திரனும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களும் தீர்மானித்தமையில் நியாயம் இருக்கவே செய்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பங்காளிக் கட்சிகளுக்கு இத்தனை இடங்கள் என்று பகிரங்கப்படுத்தினால் அந்தந்த மாவட்டங்களில் இருந்து வேட்பாளர் இடம்கேட்டுத் தொல்லை வரும் என்று கருகின்றார்கள் போலும். அதனால் தேர்தல் அறிவிக்கப்படும் வரை அமுக்கி வாசிப்பது எனத் தீர்மானித்திருக்கிறார்கள் என்பது புரிந்தது.

எது, எப்படி என்றாலும் ஊடகவியலாளர்களுக்கு அந்தப் பொறுப்பு இல்லையல்லவா? அவர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டத்தானே வேண்டும்?

ஆசனப் பங்கீடு இதுதான்:–

யாழ்ப்பாணம் மாவட்டம் –தமிழரசு – 7; புளொட் – 02; ரெலொ – 01.

வன்னிமாவட்டம் – தமிழரசு – 04; ரெலோ – 03; புளொட் –02.

மட்டக்களப்பு மாவட்டம் – தமிழரசு – 05; ரெலோ – 02; புளொட் – 01.

திருகோணமலை, அம்பாறை, மாவட்டங்களில் கட்சிகள் தங்களின் வேட்பாளர்களைப் பொறுத்துக் கேட்கும் இடங்களை அளிப்பது என்று தீர்மானிக்கப் பட்டது.

கொழும்பிலும், கம்பஹாவிலும் போட்டியிடுவது என்றும், கொழும்பில் போட்டியிடும் தலைமை வேட்பாளர் உட்பட 22பேர் கொண்ட அணியைத் தெரிவுசெய்வதற்கான உபாயங்களை ஆராய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நேற்றைய ஆசனப் பங்கீடு விவகாரம் இணக்கமாக முடிவுற்றமை குறித்து சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரிடையே முழுத் திருப்தி நிலவியமையை அறிய முடிந்தது.

– மின்னல் –

## ஒற்றையாட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் முதலாவது நாடாளுமன்ற அமர்வு நேற்றுக் கூடியது. அதில் பங்கேற்று அரசின் கொள்கை உரையை முன்வைத்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு:–

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் தலைவராக உங்களுக்கு உரை நிகழ்த்தும் இவ்வாய்ப்பானது நவம்பர் மாதம் 16 ஆம் திகதி இந்நாட்டின் மக்கள் வழங்கிய வரலாற்றுமிக்க வெற்றியினாலேயே எனக்குக் கிடைத்துள்ளது.

அமைதியானதும் அத்துடன் நியாயமானதுமான தேர்தல் ஒன்றிற்காகத் தம்மை அர்ப்பணித்த அனைத்துப் குடிமக்களுக்கும், நிறுவனங்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் நான் இவ்வேளையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த உயர்சபையில் அமர்ந்திருக்கும் நீங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராகவிருப்பினும் இந்நாட்டு மக்களது நலன் கருதி சேவையாற்றுவது எம் அனைவரதும் அடிப்படைப் பொறுப்பாகும். நான் ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக இந்நாட்டின் இராணுவ அதிகாரியொருவராகவும், பத்து வருடங்களுக்கு அண்மித்த காலம் இந்நாட்டின் பாதுகாப்புச் செயலாளராகவும் சேவையாற்றினேன்.

நான் முனைப்பான அரசியலில் ஈடுபட்டிராவிடினும் மக்கள் சேவை யாதென்பது பற்றி நான் சிறிய வயதிலிருந்து கற்றுக் கொண்டுள்ளேன்.

எனது தந்தையின் மூத்த சகோதரரான டி.எம்.ராஜபக்ஷ, 1936 ஆம் ஆண்டில் அரசப் பேரவையில் அம்பாந்தோட்டைத் தொகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தித் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தமையுடன், 1945 ஆம் ஆண்டில் அவர் காலமான பின்னர் அம்பாந்தோட்டை மக்கள் எனது தந்தையான டி.ஏ.ராஜபக்ஷவை அரச பேரவைக்காகத் தெரிவு செய்தனர். அதன்பின் அவர் மக்கள் வாக்கினால் இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்.

அன்று தொடக்கம் இற்றை வரைக்கும் உறுகுணை கிருவாபத்துவையின் கிராமப்புறமான மெதமுலனயை அடிப்படையாகக் கொண்ட மூன்று தலைமுறையைச் சேர்ந்த ராஜபக்ஷவினர் வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு மக்கள் பிரதிநிதிகளாகச் சேவையாற்றியுள்ளனர்.

இக்காலப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சரவை அமைச்சர்கள், உப சபாநாயகர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமராக மட்டுமல்லாது ஜனாதிபதிகள் இருவர்களாகவும் எங்கள் மீது நம்பிக்கை வைத்த இந்நாட்டின் பொதுமக்கள் எம்மை தேர்ந்தெடுத்துள்ளனர்.

அன்று உறுகுணையின் சிங்கமாக அழைக்கப்பட்ட டி.எம். ராஜபக்ஷ நாடாளுமன்றத்திற்கு வருகைதந்த முதல் நாளிலிருந்தே குரக்கன் நிறமான சால்வையொன்றை அணிந்திருந்தார்.

அவர் கிருவாபத்துவையின் குரக்கன் செய்கை பண்ணும் விவசாயிகளையே அந்தச் சால்வையின் மூலம் அடையாளப் படுத்தினார்.

டி.எம்.ராஜபக்ஷவின் பின் எனது தந்தையான டி.ஏ.ராஜபக்ஷவும் அவரின் பின் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களும் இந்தக் குரக்கன் நிறமான சால்வையை அணிந்திருந்தனர்.

நான் அந்தச் சால்வையை அணியாதிருப்பினும் இந்நாட்டின் கஷ்டத்துக்குள்ளான மக்கள் சார்பில் என்றென்றும் தம்மை அர்ப்பணித்த – குரக்கன் சால்வையினால் அடையாளப்படுத்தப்படுகின்ற – அந்த ஆழமான தத்துவத்தையே நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன்.

அத்தத்துவம் ஜனாதிபதித் தேர்தலுக்காக நான் சமர்ப்பித்த கொள்கைப் பிரகடனத்திலும் உள்ளடங்கியிருக்கிறது.

இவ்வேளையில் நான் 'சுபீட்சத்தின் நோக்கு' எனும் கொள்கைப் பிரகடனத்தை சபையில் முன்னிலைப்படுத்துகின்றேன்.

2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் இந்நாட்டு மக்கள் எனக்கு மிகத் தெளிவானதொரு மக்கள் வரத்தினை பெற்றுக் கொடுத்தனர். என்மேல் வைத்த மிகுந்த நம்பிக்கையைக் கொண்டே அவ்வரத்தினை எனக்கு வழங்கினர். அந் நம்பிக்கையை எவ்வகையிலும் மீறாது நாம் உறுதியளித்த அதேவாறு மக்களுக்காகச் சுபீட்சமானதொரு தேசத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு நானும் எனது அரசும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

எனக்குவாக்களித்தமக்களுக்கு இந்நாட்டு அரசியல் கலாசாரத்தில் பெரியதொரு மாற்றத்தைச் செய்யவே தேவையேற்பட்டு இருந்தது. குறிப்பாக இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட, அரசியல் ரீதியான நிகழ்ச்சிநிரலை மக்கள் நிராகரித்தனர். மேலும் அரசர்களை உருவாக்கும் வகிபாகத்தை நடித்துக் கொண்டு நாட்டின் அரசியலை வழிநடாத்துவதற்கு எவருக்கும் சந்தர்ப்பமளிக்கப்படமாட்டாது என்பதை பெரும்பான்மை மக்கள் நிரூபித்தனர்.

இந்த யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளுக்கு நான் அழைப்புவிடுக்கின்றேன். கடந்த காலத்தில் குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நடாத்திய அரசியலைத் தற்போதாவது கைவிட்டு மக்களிடையே பேதங்களை விதைப்பதற்குப் பதிலாக ஒன்றிணைந்து தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் ஒன்றுசேருமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புகளை நாம் என்றும் மதிக்க வேண்டும். அப்போது தான் மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்க முடியும்.

எமது நாட்டின் உன்னதமான அரசமைப்பின் படி எனது பதவிக் காலத்தினுள் நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாப்பேன் என்றும் புத்தசாசனத்தைப் பாதுகாத்து போஷிப்பேன் என்றும் அதேபோன்று எந்தவொரு குடிமகனையும் தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரத்தை எப்போதும் காப்பேன் என்றும் இதன்போது வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

சிறுவயதில் எனது தந்தையார் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது எனது ஞாபகத்திலுள்ளது. நான் பெரும்பாலும் நாடாளுமன்றத்தின் பொது மக்கள் கலரியில் இருந்து நாடாளுமன்றச் செயற்பாடுகளைக் கண்டுகளித்துள்ளேன். கடந்தகாலத்தில் நாங்கள் கண்ட நாடாளுமன்றம் மிகவும் முன்மாதிரியான இடமாக இருந்தது. இதில் மிக முக்கிய கருத்துமிக்க உரைகள் நிகழ்த்தப்பட்டன. மிகத் தர்க்கரீதியான வாத விவாதங்கள் இடம்பெற்றன.

பாடசாலைப் பிள்ளைகளைப் போன்று மூத்தவர்களும் அவற்றைப் பார்க்கும், செவிமடுக்கும் ஆசையுடன் நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தனர்.

நாடாளுமன்றத்தின் மேலாதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள உறுப்பினர்கள் எல்லா வகையிலும் முயற்சித்தனர். மக்கள் அன்று நாடாளுமன்றத்தை மதித்தனர். மக்கள் பிரதிநிதிகளை மதித்தனர். எனினும் பிற்பட்ட காலங்களில் இந்த மரியாதை படிப்படியாக குறைந்து போயிற்று.

இந்த நாடாளுமன்றம் மீண்டுமொருமுறை மக்களின் உண்மையான பிரச்சினைகளை கலந்துரையாடும், தேசியக் கொள்கைகளை விவாதிக்கும் சட்டவாக்கத் துறையின் பொறுப்பை உரியவாறு நிறைவேற்றும் முன்மாதிரியானதொரு இடமாக மாற்றப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தை மக்களின் மதிப்பை வென்றெடுக்கும் ஓர் இடமாக மாற்றியமைக்கும் அடிப்படைப் பொறுப்பு இங்கிருக்கின்ற மக்கள் பிரதிநிதிகளிடமே தங்கியுள்ளது.

இன்று இந்நாட்டில் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலவுகிறது. சுதந்திரம் பெற்று 70 வருடங்கள் கழிந்த பின்னரும்கூட இந்நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் நாம் திருப்தியடைய முடியாது. இந்நிலைமையை மாற்றியமைக்கும் பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு. அது சார்பில் தேவையான அர்ப்பணிப்புக்களைச் செய்வதற்கு நாம் தயாராக வேண்டும்.

மக்கள் பிரதிநிதி ஒருவரின் அடிப்படைப் பொறுப்பாவது மக்களுக்குச் சேவையாற்றுவதேயாகும். எமக்குக் கிடைத்துள்ள பதவிகள் சிறப்புரிமைகள் அல்ல, அவை பொறுப்புக்கள் என்பதை நாம் அனைவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நாடொன்றை முன்னேற்றுவதற்காகச் சீரான தொலைநோக்கும், திட்டங்களும் தேவைப்படுகின்றன. ஜனாதிபதி தேர்தலின் போது நாட்டின் மக்களுக்கு அறிமுகப்படுத்திய 'சுபீட்சத்தின் நோக்கு' எனும் கொள்கைப் பிரகடனமானது சுமார் 4 வருடங்களுக்குக் கிட்டிய காலமாக 'வியத் மக' போன்ற தேசிய அமைப்புக்களூடாகவும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'கம சமக பிலிசந்தரக்' நிகழ்ச்சித்திட்டத்தினூடாகவும் ஏனைய அரசியல் கட்சிகளுடன் நிகழ்த்திய விவாதங்களூடாகவும் மக்களது கருத்துக்களைப் பெற்றுக்கொண்டும் எனது நோக்கையும் அதில் சேர்த்துக் கொண்டும் தயாரித்த தேசிய வேலைத் திட்டமாகும்.

அத்திட்டத்திற்கமைய மக்களுக்குச் சுமையாகவிருந்த வரிச்சுமையை தளர்த்தல், வெளிப்படைத் தன்மை மற்றும் வினைத்திறமையுடன் கூடிய உயர்ந்த நிருவாகத்திறமுறையை ஆரம்பித்தல், வீணான அரச செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளல் போன்ற பல நடவடிக்கைகளைத் தற்போது நாங்கள் எடுத்துள்ளோம்.

எமது கொள்கைகளினிடையே தேசியப் பாதுகாப்புக்காக உச்சக் கட்ட முன்னுரிமை கிடைக்கின்றது.

தேசியப் பாதுகாப்புப் பொறிமுறையை மீண்டும் வலுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் நாங்கள் ஏற்கனவே எடுத்துள்ளோம். திறமை வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் பொறுப்புக்களை கையளித்துள்ளோம். தேசியப் பாதுகாப்புக்கான பொறுப்புடைய முப்படைக்கும், பொலிஸாருக்கும் இடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். தேசிய உளவுப் பிரிவு வலையமைப்பை மறுசீரமைத்து வலுப்படுத்தியுள்ளோம்.

எமது தாய் நாட்டை பயங்கரவாதத்திலிருந்தும், அடிப்படைவாதத்திலிருந்தும், பாதாளச் செயற்பாடுகளிலிருந்தும், கள்வர்கள் பயத்திலிருந்தும், கப்பம் பெறுநர்களிடமிருந்தும், போதைப் பொருள் இடையூறிலிருந்தும், சாதாரண மக்கள் வாழ்க்கையை முறியடிப்பவர்களிடமிருந்தும் பாதுகாக்கவும் அத்துடன் பெண்கள் மற்றும் சிறுவர் துன்புறுத்தல்களற்ற பாதுகாப்பான நாடாக உருவாக்குவதற்கும் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்பேன் – என்றார். (ஐ)

## சம்பந்தனிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, சாந்தி சிறீஸ்கந்தராசா ஆகியோரும் தலைவர் சம்பந்தனுடன் உடனிருந்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் முதலாவது நாடாளுமன்ற அமர்வு நேற்று இடம்பெற்றது. அரசின் கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்த நாடாளுமன்றுக்கு வந்த ஜனாதிபதி, அமர்வு நிறைவடைந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தேநீர் விருந்தளித்தார்.

அப்போது இடம்பெற்ற இந்தச் சந்திப்புக்களை 'நாடாளுமன்றில் இலேசான தருணங்கள்' என்று கோட்டாபய ராஜபக்ஷ தனது கீச்சகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் சுகநலம் விசாரித்து அவருடன் சற்று நேரம் ஜனாதிபதி உரையாடினார்.

அத்துடன், சபாநாயகர் கரு ஜயசூரிய, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருடனும் ஜனாதிபதி சிறிது நேரம் பேசினார்.

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு மைத்திரி – ரணில் அரசு சட்ட வரைவை நாடாளுமன்றில் சமர்ப்பித்தது.

எனினும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு அப்போதே எதிர்ப்புகள் வந்ததால் அதனை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை நாடாளுமன்றிலிருந்து மீளப்பெறுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அத்துடன், நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மாற்றமின்றித் தொடரவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது. (ஐ)

## புங்குடுதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள வெற்றுக் காணிக்குள் காணப்படும் பாவனையற்ற கிணற்றுக்குள் தொப்புள் கொடியுடன் வீசப்பட்ட குழந்தையின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

காணி உரிமையாளர் குழந்தையின் சடலத்தைக் கிணற்றில் கண்டு தகவல் வழங்கியமையைத் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ-07)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் தேர்தல் மாவட்ட ரீதியாக ஆசனப் பங்கீட்டு விவரத்தை அவர் வெளியிடவில்லை.

அனைத்துத் தரப்பினருக்கும் திருப்தி தரத் தக்க வகையில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது. அதை மட்டுமே இப்போதைக்கு மக்களுக்குத் தெரிவிப்பது எனக் கூட்டத்தில் முடிவுசெய்துள்ளோம். ஆசன ஒதுக்கீட்டு விவரத்தை உரிய காலத்தில் அறிவிப்போம். இப்போதைய நிலையில் எந்த முரண்பாடுகளும் இல்லாமல் – எல்லோருக்கும் திருப்தி தரும் விதத்தில் – பங்கீடு முழு இணக்கமாக முடிவடைந்துள்ளது என்பதை மட்டும் கூறமுடியும் – என்றார் அவர்.

இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் எம்.பிக்கள் மாவை சேனாதிராசா, சுமந்திரன், சிறீதரன் மற்றும் கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கம் ஆகியோரும் –

புளொட் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி, ஆர். இராகவன்(ஆர்.ஆர்.) ஆகியோரும் –

ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., சுரேந்திரன் ஆகியோரும் – பங்குபற்றினர். (உ)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர், மற்றும் கட்சித் தலைவர்கள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, அனைவரும் பரஸ்பரம் நட்புறவாக பேசிக் கொண்டனர்.

எனினும், ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தேநீர் விருந்தை புறக்கணித்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் விருந்தில் கலந்து கொண்டிருந்தனர்.

## அன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது அவர் நாடாளுமன்றுக்கு மிகவும் ஆடம்பரமாக, அனைத்து விதமான மரியாதைகளுடனும் வந்திருந்தார்.

எனினும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகிய பின் அவர் நேற்று நாடாளுமன்றுக்கு மிகவும் சாதாரண மரியாதைகளுடன் வந்திருந்தார்.

ஜனாதிபதிக்காகத் தீர்க்கப்படவிருந்த 21 மரியாதை வேட்டுக்கள் மற்றும் வீதியின் இருமருங்கிலும் இடம்பெறவிருந்த இராணுவ மரியாதை ஆகிய சம்பிரதாயங்களை இரத்துச்செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொண்டமனாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை, புலோலியைச் சேர்ந்த கந்தசாமி கஸ்தூரன் (வயது – 26) என்ற இளைஞரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

5 நண்பர்களுடன் தொண்டமனாறு கடல் நீரேரியில் குளித்துக் கொண்டிருந்தபோதே அவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டார்.

இந்த நிலையில் பொதுமக்கள் இணைந்து சுமார் ஒரு மணி நேரமாகத் தேடினர். எனினும் இளைஞர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

உயிரிழந்த இளைஞனின் சடலத்தை அவரது பெற்றோர் அடையாளம் காட்டினர். (ஐ-07)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online


## வாமனனின் மூன்றாவது அடி!

ஒரு புராணக் கதையின் சுருக்கம் இது:–

*விஷ்ணுவின் தசாவதாரங்களில் ஐந்தாவது வாமன அவதாரம். விஷ்ணு பக்தனான மகாபலி சக்கரவர்த்தி அரக்கர் குலத்தைச் சேர்ந்தவன். அவன் உலகை வெல்ல யாகம் ஒன்று செய்யத் திட்டமிட்டான். அதனை முறியடிக்க விஷ்ணு மூன்றடி உயர வாமன உருவெடுத்தார். யாகசாலைக்கு வந்து மூன்றடி மண் யாசம் கேட்டார். செருக்கில் இருந்த மகாபலி மூன்றடிதானே எனக் கருதித்தரச் சம்மதித்தான். விஷ்ணு திரிவிக்கிரமன் வடிவு எடுத்து வானை ஒரு காலாலும், மண்ணுலகை ஒரு காலாலும் அளக்க, மூன்றாமடி அளக்க இடமில்லாமல் போனது. மூன்றாமடியை மகாபலியின் தலையில் வைத்து அவனை [அவன் அகந்தையை] அழித்தார் விஷ்ணு – என்பது புராணக் கதை.*

இதைத்தான் *'கௌரவம்'* படத்திலே கவிஞர் கண்ணதாசன் *'மூன்றடி மண் கேட்டான் வாமனன் உலகிலே; மூன்றென வந்ததோ மன்னவன் தலையிலே!'* – என்று கவிதையிலே வரி அமைத்தான்.

தென்னிலங்கை ராஜபக்ஷக்களின் அரசியலிலும் இன்று இதுதான் நிலைமை போலும்.

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளின் 41 வருட ஆட்சிக் காலத்தை எடுத்துப் பார்த்தீர்களானால் இதுவரை பதவியில் இருந்த ஆறு ஜனாதிபதிகளில் மஹிந்த ராஜபக்ஷ ஒரு விடயத்தில் வேறுபட்டு நிற்கின்றமையை நீங்கள் காணமுடியும்.

ஜனாதிபதி பிரேமதாஸ தமது பதவிக் காலத்திலேயே அகால மரணமடைய நேரிட்டது. மற்றைய நால்வருமே – ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, சந்திரிகா குமாரதுங்க, டி.பி.விஜேதுங்க, மைத்திரிபால சிறிசேன – இந்த நால்வருமே தமது அதிகாரப் பதவிக் கதிரையை விட்டு இறங்கியதும் செல்லாக் காசாகினர் என்பது கண்கூடு.

இந்த நால்வரில் தத்தமது பதவிக் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ போன்று நிறைவேற்றதிகாரத்தை முழுப் பலத்தோடு பிரயோகித்து அசைக்க முடியாதவர்களாக இருந்தவர்கள் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும், சந்திரிகா குமாரதுங்கவும். அதிகாரத்தில் இரும்புப் பிடி ஆட்சியாளர்களாகவே அவர்கள் விளங்கினர். ஆனால் அவர்களுக்கு நேரடியாகப் பின்னர் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தமக்கு முன்னையவர்களின் கொட்டத்தை அடக்கி, அவர்களை அரசியலில் செல்லாக்காசாக்கி, அமுக்கி வைத்திருப்பதில் வெற்றிகண்டனர்.

ஆனால், கடைசியாகப் பதவியில் இருந்த மைத்திரிபாலசிறிசேனவினால் இந்த விடயத்தில் எதுவும் சாதிக்க முடியவில்லை. மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் விஸ்வரூபத்தையோ, செல்வாக்கு எழுச்சியையோ மைத்திரியால் கட்டுப்படுத்தவே இயலவில்லை.

நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன இருந்த போதும், அவரிடம் ஜனாதிபதித் தேர்தலில் தோற்ற மஹிந்த ராஜபக்ஷவிடமே அரசியல் செல்வாக்கு இருந்தது. மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியுடன் சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்த போதுதான், அக் கட்சியில் எம்.பியாகி, அதன் எம்.பிக்களில் ஆறில் ஐந்து பகுதியினரைப் பிரித்து எடுத்து, ஒரு தனிக் கட்சியைத் தோற்றுவித்து, அதனூடாக புதிய ஜனாதிபதியையும் தெரிவு செய்ய வைக்கும் நிலைக்கு ஒரு பெரும் அரசியல் சக்தியாக – தனித்துவ அரசியல் தலைமையாக – மஹிந்த ராஜபக்ஷவினால் மிளிர முடிந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் தோற்றபின்னர், தான் தோற்றுவித்த புதிய கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிக்கும் தனித்துவ அதிகாரம் – சர்வாதிகாரம் – மஹிந்தவிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ காட்டும் வேட்பாளருக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்க தென்னிலங்கை ஒட்டுமொத்தமாகத் தயாராக இருந்தது என்பது அன்றே வெளிப்பட்ட செய்தி.

அந்தச் சமயத்தில் தன்னிகரில்லாத – வேறு யாருமே கேள்விக்கோ, சவாலுக்கோ உட்படுத்த முடியாத – பெருந் தலைவராக மஹிந்தர் விளங்கினார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று பலரும் கேள்வி எழுப்பிய சமயத்தில்தான் கோட்டாபய ராஜபக்ஷவே என்று தாமே தனித்து முடிவெடுத்து அறிவித்தார் மஹிந்தர்.

அந்த வேட்பாளர் தெரிவை எதிர்பார்த்து மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் கோட்டாபய ராஜபக்ஷ பதுங்கி நின்ற காட்சி, மகாபலி சக்கரவர்த்தி முன்னால் மூன்றடி உயர வாமனன் பதுங்கி நின்று யாசகம் வேண்டியமையை ஒத்து இருந்தது.

தமையனார் மஹிந்த ராஜபக்ஷவிடம் காலில் வீழ்ந்து ஆசி பெற்றே ஜனாதிபதித் தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் செய்தமை வரை பல்வியமாக இருந்த கோட்டாபய, இப்போது வாமனன் போல மூன்றாவது அடியைத் தூக்கி வைக்கத் தயாரானமை போன்ற நிலையை எட்டியிருக்கிறார் என எமக்குப்படுகின்றது.

ஜனாதிபதிப் பதவி நிலை என்ற அதிகாரம், செல்வாக்கு மற்றும் ஆளணி, அம்புகளை வைத்துக் கொண்டு கோட்டாபய தரப்பு நகர்த்தும் அரசியலைப் பார்க்கும்போது, பிரேமதாஸவின் பதவிக் காலத்தில் ஜே.ஆருக்கும், மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில் சந்திரிக்காவுக்கும் அரசியல் ரீதியாக ஏற்பட்ட கையாலாக நிலைமைதான் நினைவுக்கு வருகின்றது.

இதுவரை இல்லாதவாறு, பொதுஜன பெரமுனவுக்குள் மஹிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கு, அதிகாரம், முன்னிலைமை ஆகியவற்றை எல்லாம் தாண்டி, வெட்டி இப்போது ஓடுகின்றது கோட்டாவின் பிடி என்றே தெரிகிறது. என்ன செய்யப் போகிறார் மஹிந்தர்?

பொதுத்தேர்தல் முடியும் வரை பேச்சு, மூச்சு அடக்கியிருப்பது தான் அவருக்கு உள்ள ஒரேமார்க்கம் போலும்.

# மிலேனியம் உடன்பாட்டை சஜித் ஏன் முன்னரே எதிர்க்கவில்லை?

## செஹான் சேமசிங்க கேள்வி

கொழும்பு, ஜன. 04

மிலேனியம் சவால் ஒப்பந்தத்துக்கு தற்போது எதிர்ப்பு தெரிவிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ, கடந்த அரசில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்த போதிலும் ஏன் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் திட்டங்கள் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கேள்வியெழுப்பினார்.

நிதி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ மிலேனியம் சவால் ஒப்பந்தத்தைப் புறக்கணிப்பதற்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகக் கூறுகின்றார்.

அவர் அமைச்சரவையில் அங்கத்துவம் வகித்த காலத்திலேலேயே இந்த ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது. இந்த ஒப்பந்தம் நாட்டுக்குப் பாதகமானது என்று தெரிந்திருந்தால் ஆரம்பத்திலேயே இதற்கு அவர் எதிர்ப்பு தெரிவிக்காதது ஏன் என்பதே எமது கேள்வியாகும்.

தற்போது நாம் மிலேனியம் சவால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி போலியான பிரசாரங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது, அந்த ஒப்பந்தத்தில் என்ன விடயங்கள் கூறப்பட்டிருக்கின்றன என்பது தொடர்பில் தெளிவு பெற்றுக் கொள்வதற்கும் அது தொடர்பில் முழுமையாக அறிந்து கொள்வதற்குமே ஒப்பந்தம் தொடர்பில் ஆராய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மிலேனியம் சவால் ஒப்பந்தம் மாத்திரமின்றி எக்சா, சோபா மற்றும் சிங்கப்பூர் ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்வது குறித்தும் அரசு கவனம் செலுத்தியிருக்கிறது. மாறாக ஐ.தே.க கூறுவதைப் போன்று நாம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முயற்சிக்கவில்லை. மக்களால் புறக்கணிக்கப்பட்ட குழுவினரால் முன்வைக்கப்படும் இவ்வாறான போலியான பிரசாரங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துவதில்லை.

நாட்டிலுள்ள காணிகளை விற்பனை செய்வதற்கு எமது அரசு முயற்சிப்பதாகவும் ஐ.தே.க. குற்றஞ்சுமத்துகிறது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினதும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதும் ஆட்சியின் கீழ் எந்தச் சந்தர்ப்பத்திலும் தேசிய சொத்துக்கள் விற்கப்படமாட்டாது என்று மக்களுக்கு உறுதியளிக்கின்றோம்.

அத்தோடு வரிகளை குறைத்து எவ்வாறு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று கேள்வியெழுப்படுகிறது. வரிகளை குறைக்காமல் ஒருபோதும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. வரிகளைக் குறைக்கும் அதேவேளை மறுபுறம் அநாவசியச் செலவுகளை மட்டுப்படுத்தினால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அத்தோடு மதுபான உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் எத்தனோல் இறக்குமதி இடைநிறுத்தப்பட்டது. இதன் மூலம் தேசிய உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்க முடியும். தேசிய உற்பத்தியாளர்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதில் அரசு பின்நிற்காது.

இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் கடந்த அரசால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனையும் எம்மால் விரைவில் மீளச் செலுத்த முடியும். வரி குறைப்புக்கள் கடனை மீள செலுத்து வதில் எவ்விதத்திலும் தாக்கம் செலுத்தாது என்பதோடு கடனை மீளச் செலுத்துதல் எமது அரசுக்குப் பாரிய சவாலாகவும் அமையாது – என்றார். (ஐ)

# மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் கள்ளுத் தவறணை வேண்டாம்!

## மாமூலைக்கிராமத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம்






முல்லைத்தீவு, ஜன. 04

மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையை அகற்றி வேறு இடத்துக்கு மாற்றுமாறு கோரி முல்லைத்தீவு முள்ளியவளை மாமூலை கயட்டையடி மக்களால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தண்ணீர்ஊற்று புளியங்குளம் வீதியில் மாமூலை கயட்டையடிப் பகுதியில் மிக நீண்டகாலமாக கள்ளுத்தவறணை ஒன்று இயங்கி வருகின்றது. ஆரம்ப காலத்தில் இந்தக் கள்ளுத்தவறணை பகுதியில் கிராமங்கள் இல்லாத நிலையில் இந்தக் கள்ளுத்தவறணை இயங்கி வந்தது.

தற்போது அந்தப் பகுதியில் புதிய குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் கள்ளுத்தவறணை அமைந்திருப்பதால் பல்வேறுபட்ட குற்றச்செயல்களும் சட்டவிரோத நடவடிக்கைகளும் தலை தூக்கியுள்ளதோடு அருகில் குடியிருப்பவர்கள் குடிகாரர்களால் தினமும் இடைஞ்சல்களுக்கு உள்ளாவதாகவும், பாடசாலை மாணவர்கள் ,பெண்கள் முதலானவர்கள் இந்த கள்ளுத்தவறணைக்கு குடிக்க வருபவர்களால் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்து அதனை வேறு இடத்துக்கு மாற்றப்படவேண்டும் எனத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கள்ளுத்தவறணை வாயிலை மூடி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது . இறுதியில் முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலையீட்டையடுத்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட மக்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைப் பிரதேச செயலருக்குக் கையளிக்கும் விதமாக கிராம அலுவலரிடம் ஒப்படைத்தனர் .

விரைவில் இந்த கள்ளுத்தவறணை வேறு இடத்துக்கு மாற்றப்படாது விட்டால் தமது போராட்டம் தொடரும் என ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

**நாளை 05.01.2020 - ஞாயிற்றுக்கிழமை**

நட்சத்திரம்: அச்சுவினி மு.ப 11.33 வரை
திதி : தசமி பி.இ 1.49 வரை

இராகுகாலம் : 5.01 – 6.31
சுப நேரம் : 9.31 – 11.01

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.04

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை **காலை08.00 மணியிலிருந்து மாலை 05.00மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

உரும்பிராய், கைதடி வடக்கு, நவபுரம், பிறவுண் வீதி, அரசடி வீதி புகையிரத கடவையிலிருந்து தட்டார்தெரு சந்தி வரை, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி வரை, அசாத் வீதி, வி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப்புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன் பண்ணை வீதி, காதி அபுபக்கர் வீதி, ஹரி கரன் அச்சகம் பிறைவேற் லிமிரட், அண்ணா மலையான் சிறி இராகவேந்திரா என்றபிறை சஸ் பிறைவேற் லிமிரட், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல்.சி, சங்கானை அராலி வீதி ஆகிய இடங்களிலும்–

**வவுனியாப்பிரதேசத்தில் -**

கூமாங்குளம் கிராமம், அவுசதப்பிட்டிய கிராமம், கந்தசாமிநகர், நித்திக்குளம், சண்முகபுரம், கங்கன்குளம், செட்டிகுளம், புளியங்குளம், காந்திநகர், அரசடிகுளம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

கரைசலிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடறப்டைமுகாம், தலைமன்னார் Palmyra house தலைமன்னார் வைத்தியசாலை,கூல்மென்ஐஸ்தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற் சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற் சாலை, Palmyrah house கரைசல் ஆகிய பிரதேசங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் - காலை 07.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை** – மாசார், சோரன்பற்று, உமையாள்புரம், விளாவோடை இராணுவ முகாம், ஆனந்தபுரத்திலிருந்து முருகண்டி வரை, இரணைமடுச்சந்தி, அறிவியல் நகர், ஆனந்த புரம் NAITA கிளிநொச்சி வைத்தியசாலை, ஸ்ரீலங்கா ரெலிக்கொம், விக்ரமரட்ண பிறை வேட் லிமிட்டட், Ware House Complex மத்திய வங்கி, Mas Active, யுனிச்செலா, பொறி யியல்பீடம், விவசாயபீடம், கார்கில்ஸ் Argo, இராணுவ பாசறை ஆகிய பிரதேசங்களிலும்–

**நாளை ஞாயிறு காலை 09.00 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை**

**மன்னார் பிரதேசத்தில் -**

சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார்வரை, தலைமன்னார் கடறப்டை முகாம், தலைமன்னார் Palmyra house கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyra houseகரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத் தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# பெண் பணியாளர்களின் உரிமைகளை பாதுகாக்குமாறு வவுனியாவில் பேரணி




கொழும்பு, ஜன. 05

வவுனியா வர்த்தக நிலையங்களில் பணி புரியும் பெண் பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க கோரிய விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று, வவுனியாவில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட உள்ளூராட்சி பெண்கள் ஒன்றியம், பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி இடம்பெற்றிருந்தது.

வவுனியா பழைய பஸ் நிலையத்தின் முன்பாக ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டம் கண்டி வீதி வழியாக, வவுனியா நகரசபை வளாகத்திற்கு சென்று அங்கு உபநகரபிதா சு.குமாரசாமியிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. அங்கிருந்து வவுனியா மாவட்ட செயலகத்துக்கு சென்று அரச அதிபர் எம்.ஹனீபாவிடமும் மகஜர் கையளிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆணுக்கு பெண் சமத்துவம் வழங்கப்படவேண்டும், அடிக்காதே அடிக்காதே பெண்ணை அடிக்காதே, வேண்டாம் வேண்டாம் வன்முறை வேண்டாம் போன்ற கோசங்களை எழுப்பியிருந்தனர். (ஐ)




# சிறுபான்மையினர் அரசியலில் ஓரங்கட்ட தனிநபர் பிரேரணை

கொழும்பு, ஜன. 04

சிறுபான்மையினரின் ஆதரவு இல்லாமல் அரசு ஒன்றை அமைப்பதற்கு 15 ஆம் திருத்தச் சட்டத்தை மாற்றும் தனிநபர் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் தனிநபர் பிரேரணை, அரச வர்த்தமானியில் நாடாளுமன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளவை வருமாறு –

இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில், ஒரு தொகுதிக்கான வாக்கு வரம்பு மட்டம் 12.5 சதவீதமாக இருந்தது.

எனினும் 1988 இல் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான எம்.எச்.எம்.அஷ்ரப்பின் வேண்டுகோளின் பேரில் இந்த வரம்பு மட்டம் 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

இதன் காரணமாக பிரதான அரசியல் கட்சியும் கூட அதிகாரத்தை பிடிப்பதற்கு தேவையான 113 ஆசனங்களைப்பெற முடியாமல் போனது. எனவே பிரதான அரசியல் கடசிகளும் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைக் கோர வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால் சிறுபான்மை கட்சிகள் கேட்கும் வகையில் பிரதான கட்சிகள் செயற்பட வேண்டியுள்ளமையினால் அரசு பலமிழக்கும் நிலைமை காணப்படுகின்றது.

அத்துடன் சிறுபான்மையினரிடம் கையேந்தும் நிலையிலிருந்து விடுபடவே இந்த தனிநபர் பிரேரணையை கொண்டுவருவதற்கு தீர்மானித்துள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சு.க.– பெரமுன இடையே பேச்சு

கொழும்பு, ஜன. 04

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவது என்பது குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளதாக சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து இதுவரையில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எதிர்வரும் நாகளில் இது குறித்து கலந்துரையாடப்படும் என தான் எதிர்பார்ப்பதாகவும் அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவார் எனவும் இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் மொட்டு சின்னத்தின் கீழேயே போட்டியிடவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றனர்.

எனினும் இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் தொடர்ச்சியாக கடும் எதிர்ப்பினை வெளியிட்டு வருவதாகதகவல்கள்வெளியாகியுள்ளன.

இதேவேளை, நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலின் போது அமைக்கப்பட்டிருந்த தேர்தல் கூட்டணியின் ஆரம்பத்தில், நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கதிரைச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவது குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயனைப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

# தமிழகத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தல்களில் தி.மு.க. பெரு வெற்றி என ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை,ஜன.04

தமிழகத்தில் நடந்து முடிந்துள்ள உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது என தி.மு.க. தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு:-

”நடந்து முடிந்துள்ள உள்ளாட்சித் தேர்த லில் ஆளும்கட்சியின் அராஜகம், அதிகார துஷ்பிரயோகம், தேர்தல் ஆணையத்தின் ஒருதலைப்பட்சமான அணுகுமுறை ஆகிய எதிர்மறைக் கூறுகளை மீறி தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. உள்ளபடியே இது நமக்கு மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும்.

எத்தகைய அராஜகத்தையும், அடாவடிகளையும் மீறி வெற்றி பெறும் வல்லமை மாபெரும் மக்கள் சக்திக்கு உண்டு என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் மெய்ப்பித்துக் காட்டி இருக்கின்றன. தி.மு.க. மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையும், கொண்டுள்ள விருப்பமும், ஆளும் கட்சி மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பும் இதன் மூலமாக வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

தமிழக உள்ளாட்சித் தேர்தல் 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமே, அதாவது மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே நடந்திருக்க வேண்டும். மக்களைச் சந்திக்கப் பயந்து தயங்கிய அ.தி.மு.க. அரசு, உள்ளாட்சித் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வந்தது.

மக்களைச் சந்திக்க ஒரு பக்கம் பயம் என்றால், உள்ளாட்சி அமைப்புகளில் ஏராளமான தி.மு.க. பிரதிநிதிகள் வந்துவிட்டால் தங்களின் அநியாய – அன்றாடக் கொள்ளைகளைத் தொடர முடியாது என்ற நினைப்பு இன்னொரு பக்கம். இந்த இரண்டு காரணங்களால்தான் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்தார்கள்.

உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும், அதுவும் முறைப்படி நடத்த வேண்டும் என்பதற்காக சென்னை உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் தி.மு.க. சார்பில் வழக்குகளைத் தாக்கல் செய்தோம். நீதிமன்றம் விதித்த கடுமையான கட்டுப்பாடுகள், உத்தரவுகள் காரணமாகத்தான், இப்போது இந்தத் தேர்தலை நடத்தியுள்ளது தமிழக தேர்தல் ஆணையம்.

தமிழகத்தில் 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் கடந்த 27, 30 ஆகிய நாட்களில் நடந்தது. மொத்தம் உள்ள 91 ஆயிரத்து 975 பதவிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் மாவட்டக் கவுன்சிலர்களுக்கான மொத்த இடங்கள் 515. ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்களுக்கான மொத்த இடங்கள் 5,090. கட்சி ரீதியாக நடைபெற்ற இப்பதவி இடங்களுக்கான தேர்தலில் பெரும்பான்மை இடங்களை தி.மு.க. கூட்டணி கைப்பற்றியுள்ளது.

வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதலே தி.மு.க. கூட்டணி முன்னணியில் இருந்தது. இதனை ஆளும் கட்சியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் தேர்தல் ஆணையத்தின் துணையோடு, தி.மு.கவின் வெற்றியைத் தடுக்கச் சதி செய்தார்கள். தி.மு.கவின் வெற்றியை அறிவிக்கத் தயங்கினார்கள். மறைக்கத் திட்டமிட்டார்கள். சொல்லப் போனால், தி.மு.க. வெற்றி பெற்ற இடங்களையே அ.தி.மு.க. வெற்றி பெற்ற இடங்களாக மாற்றி அறிவிக்கவும் செய்தார்கள்.

நேற்றைய தினம் மதியம் 2 மணிக்கு மாநிலத் தேர்தல் ஆணையரைச் சந்தித்து முறையிட்டேன். ’சேலம் மாவட்டத்திலேயே தி.மு.க. வெற்றி பெறுகிறது. முதல்வரின் சொந்த மாவட்டம் என்பதால் தயங்குகிறீர்களா? இந்தச் சதிச் செயல்கள் நிறுத்தப்படாவிட்டால் தேர்தல் ஆணையத்திலேயே உண்ணாவிரதம் இருப்பேன்’ என்று சொல்லிவிட்டு வந்தேன். மாலையிலாவது நிலைமை மாறிவிடும் என்று பார்த்தால் மாறவில்லை.

எனவே, நள்ளிரவு 11 மணிக்கு மீண்டும் தேர்தல் ஆணையம் சென்று ஆணையரைச் சந்தித்தேன். அப்போதும் அவர்களது செயல்பாட்டில் மாற்றம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆளும் கட்சியின் அராஜகம், தேர்தல் ஆணையத்தின் அலட்சியம் தொடரத்தான் செய்கிறது. இதனையும் மீறி தி.மு.க. கூட்டணி மிகப் பெருவாரியான இடங்களில் வெற்றி பெற்று வருகிறது.

வெற்றி பெற்ற உள்ளாட்சிப் பிரதிநிதிகளை மனமார வாழ்த்துவதுடன், தி.மு.க. கூட்டணி மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சியில் நடந்து வரும் ஊழலாட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க, தி.மு.க. கூட்டணியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சிறப்போடும், நியாயமாகவும் நேர்மையோடும் செயல்படுவார்கள். மக்கள் நலத்திட்டங்களை உண்மையாகவும், முழுமையாகவும் மக்களுக்குப் பயன்பெறும் திட்டங்களாக மாற்றுவார்கள் என்று உறுதி அளிக்கிறேன்.

இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. அமைச்சர்கள் மாவட்டங்கள் வாரியாக முகாமிட்டும், பணத்தை வாரி இறைத்தும் அவர்களுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஆளும் கட்சியின் மீது எந்த அளவுக்கு மக்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள் என்பதற்குச் சில உதாரணங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜாவின் மகள் தோல்வியடைந்துள்ளார். மானாமதுரை அ.தி.மு.கவின் எம்.எல்.ஏ. நாகராஜின் மனைவி தோல்வியைத் தழுவியுள்ளார். மண்ணச்சநல்லூர் அ.தி.மு.கவின் எம்.எல்.ஏ.பரமேஸ்வரியின் கணவர் தோற்றுள்ளார்.

சேந்தமங்கலம் அ.தி.மு.கவின் எம்.எல்.ஏ. சந்திரசேகரனின் மகன் தோற்றார் என முதலில் அறிவிக்கப்பட்டு, அது பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த நான்கும் ஆளும் கட்சி மீது மக்களுக்கு உள்ள கோபத்தின் வெளிப்பாடே ஆகும். இதிலிருந்து ஆளும் கட்சியினர் பாடம் கற்பார்களா என்பது சந்தேகம்தான். ஆனால், அதிமுகவுக்குப் பாடம் கற்பிக்க மக்கள் தயாராகி விட்டார்கள் என்பதன் உறுதியான அடையாளம்தான் இது.

இந்தத் தேர்தலில் சில நம்பிக்கை நிறைந்த காட்சிகளும் இருந்தன. திருப்பூர் மாவட்டத்தில் 82 வயது மூதாட்டியும், மேலூரில் 79 வயது மூதாட்டியும், தோவாளையில் 73 வயது மூதாட்டியும் வெற்றி பெற்றுள்ளார்கள். கிருஷ்ணகிரியில் 21 வயது கல்லூரி மாணவி வெற்றி பெற்றுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் கான்சாபுரத்தில் துப்புரவுத் தொழிலாளியான பெண் ஒருவர், தான் வேலை பார்த்த ஊராட்சிக்கே தலைவி ஆனது மக்களாட்சியின் மாண்புக்கு உதாரணம் ஆகும். திருச்செங்கோடு ஒன்றியக் கவுன்சிலர் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட திருநங்கை ரியா பெற்றுள்ள வெற்றி, விளிம்பு நிலை மக்கள் அதிகாரம் பெறத் தொடங்கியதன் அடையாளம்.

‘உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும்’, ‘உடனடியாக நடத்த வேண்டும்’, ‘முறையாக நடத்த வேண்டும்’ என்று தி.மு.க. சார்பில் சொல்லி வந்ததற்குக் காரணம் இதுதான். இதனை ஆளும்கட்சி விரும்பவில்லை. தனது ஊழல், முறைகேடுகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் இடையூறாக இருப்பார்கள் என்பதால் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்தார்கள். அதனையும் முழுமையாக நடத்தாமல் அரைகுறையாக நடத்தினார்கள்.

நகர்ப்புற ஊராட்சி அமைப்புகளுக்கும் சேர்த்து தேர்தல் நடத்தி இருந்தால் தி.மு.க. இன்னும் மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கும். இன்னும் முழுமையான முடிவுகள் வராத நிலையில், இதுவரை வெளியான முடிவுகளில் பெரும்பான்மை வெற்றியை தி.மு.க. கூட்டணிக்குக் கொடுத்திருக்கும் தமிழக வாக்காளர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# நித்தியானந்தா குறித்து எந்தத் தகவலுமே இல்லை என்கின்றது இந்திய மத்திய அரசு

புதுடெல்லி,ஜன.04

சர்ச்சைச் சாமியார் நித்தியானந்தா பற்றி எந்தத் தகவலும் இதுவரை கிடைக்கவில்லை என இந்திய மத்திய அரசு கூறியுள்ளது

கர்நாடக மாநிலம் பிடதியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆசிரமங்களை நடத்தி வரும் நித்தியானந்தா மீது குழந்தைகள் கடத்தல் மற்றும் சிறை வைத்தல் தொடர்பான வழக்கு குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு பதிவு செய்யப்பட்டது.



இது தொடர்பாக அங்குள்ள அவரது ஆசிரம கிளை ஒன்றில் பொலிஸார் சோதனை நடத்தி 4 குழந்தைகளை மீட்டனர். இந்த சம்பவத்தில் ஆசிரம நிர்வாகிகளான 2 பெண் சீடர்கள் உள்பட மேலும் சிலரைப் பொலிஸார் கைது செய்தனர்.

இதற்கிடையே ஆசிரமத்தில் தங்கியிருந்த பெண் சீடரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என கர்நாடக மாநிலம் ராம்நகர் நீதிமன்றில் நித்யானந்தா மீது வழக்கு நிலுவையில் உள்ளது. இதைப்போல மேலும் சில வழக்குகள் அவருக்கு எதிராக பல்வேறு நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் சாமியார் நித்தியானந்தா இந்தியாவை விட்டு வெளியேறி உள்ளார்.

தற்போது வெளிநாட்டில் தலைமறைவாக இருக்கும் அவரை இந்தியா கொண்டு வர வேண்டும் என கர்நாடக நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது. ஈகுவடார் நாட்டில் அவர் பதுங்கியிருக்கிறார் எனக் கூறப்பட்ட நிலையில், அவரை இந்தியாவுக்கு நாடு கடத்திக் கொண்டுவர மத்திய அரசும், கர்நாடக மாநில அரசும் தீவிர நடவடிக்கையில் இறங்கின.

ஆனால் நித்தியானந்தா பற்றி எந்தத் தகவலும் இதுவரை கிடைக்கவில்லை என மத்திய அரசு கூறியுள்ளது. மத்திய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் ரவீஷ்குமார் டெல்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசும்போது இதைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், “நித்தியானந்தாவைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் நாங்கள் பல நாடுகளின் தூதரகங்களையும், அரசுகளையும் நாடியுள்ளோம். நித்தியானந்தா குறித்துத் தகவல் இருந்தால் தெரிவிக்குமாறு கேட்டு இருக்கிறோம்.

ஆனால் இது தொடர்பாக ஈகுவடார் நாட்டைத் தொடர்பு கொண்டபோது அவர் அங்கிருந்து வெளியேறிவிட்டார் எனத் தகவல் கிடைத்தது”என்று குறிப்பிட்டார்.

# திருப்பதியில் கடந்த ஆண்டு பக்தர்கள் ஆயிரத்து 161 கோடி ரூபா காணிக்கை

## 2 கோடி 79 லட்சம் பக்தர்கள் ஏழுமலையானைத் தரிசிப்பு

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் 2019 ஆம் ஆண்டில் பக்தர்கள் இந்தியப் பணத்தில் ஆயிரத்து 161 கோடி 74 லட்சம் ரூபாவைக் காணிக்கையாக செலுத்தியுள்ளனர்.


2 கோடியே 78 லட்சத்து 90 ஆயிரம் பக்தர்கள் 2019 ஆம் ஆண்டில் திருப்பதியில் சாமி தரிசனம் செய்துள்ளனர். சாமி தரிசனம் செய்த பக்தர்களுக்கு கடந்த ஆண்டு 12 கோடியே 49 லட்சத்து 80 ஆயிரம் லட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

திருமலை திருப்பதி வெங்கடாசலபதி கோயிலுக்கு, தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து தரிசனம் செய்கின்றனர். நாள்தோறும் அவர்கள் செலுத்தும் காணிக்கைகளைத் திருமலை திருப்பதி தேவஸ்தானம் நிர்வகித்து வருகிறது. பக்தர்கள் செலுத்தும் காணிக்கைகளை, நிர்வாகச் செலவுகள் போக மீதமுள்ளவற்றை வங்கியில் வைப்புநிதியாக தேவஸ்தானம் சேமித்து வைத்து வருகிறது.

### லட்டு விலை உயர்வு

நடைபயணமாக மலையேறி தரிசனம் செய்வோருக்கு ஒரு லட்டு இலவசமாகவும், தர்ம தரிசனம் செய்வோருக்கும், மலையேறிச் செல்லும் பக்தர்களுக்கும் 10 ரூபாய்க்கு 2 லட்டுகளும் கூடுதலாக 2 லட்டுகள் பெற 25 ரூபாய் என்றும் விற்பனை செய்கிறது. அதேபோல் 300 ரூபா கட்டணம் செலுத்தி சிறப்பு தரிசனம் செய்வோர், வி.ஐ.பி. பிரேக் தரிசனம் செய்யும் பக்தர்களுக்கு இரண்டு லட்டுகள் இலவசமாகவும் வழங்கப்படுகின்றன.

இனிமேல் திருப்பதிக்கு ஏழுமலையானை தரிசனம் செய்ய வரும் அனைவருக்கும் ஒரு லட்டு இலவசமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் கூடுதல் லட்டு வாங்க விரும்புவோர் 50 ரூபா கொடுத்து ஒரு லட்டு வாங்கிக்கொள்ளலாம். இது வரும் வைகுண்ட ஏகாதசி முதல் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# இந்தோனேசியாவில் பேய்மழை வெள்ளத்தில் சிக்கி 23 பேர் பலி



ஜகார்த்தா, ஜன.04

இந்தோனேசியாவில் வெள்ளத்தில் சிக்கி 23 பேர் பலியாகினர்.

இந்தோனேசியா தலைநகரான ஜகார்த்தா மற்றும் மேற்கு ஜாவா மாகாணத்தில் கடந்த சில நாள்களாக இடைவிடாது கனமழை கொட்டி வருகிறது.

இதனால் நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. இதனால் சுமார் 62 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுத் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டு உள்ளனர்.

பாதுகாப்பு கருதி ஜகார்த்தா நகரின் பல்வேறு இடங்களில் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதால் நூற்றுக்கணக் கான வீடுகள் இருளில் மூழ்கி உள்ளன. மழை வெள்ளம் காரணமாக ஜகார்த்தாவின் உள்நாட்டு விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. எனவே, விமான நிலையத்தில் ஏறத்தாழ 20,000 பயணிகள் தவிக்கின்றனர்.

வெள்ளத்தில் சிக்கி இதுவரை 23 பேர் பலியாகினர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் பலர் மாயமாகி உள்ளனர். வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்பு குழுவினர் குவிக்கப்பட்டு முழு வீச்சில் மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

சில பிரதேசங்களில் வெள்ளம் வடிந்த நிலையில், வீடுகளுக்கு திரும்பி உள்ள மக்கள், சேறும், சகதியுமாக கிடக்கும் தங்கள் வீடுகளைப் பார்த்து உள்ளம் நொந்துபோயினர்.

மொத்த வீட்டையும், வெள்ளம் பாழ் படுத்திய நிலையில், சரி செய்யும் பணிகள் தீவிரமடைந்துள்ளன. இயல்பு வாழ்க்கை திரும்ப இன்னும் பல நாட்கள் ஆகும் என்பது அங்குள்ள மக்களின் கவலையாக உள்ளது.



# இராணுவத் தளபதி உட்பட 8 அதிகாரிகள் தைவான் ஹெலிக்கொப்டர் விபத்தில் பலி!









ஹெலிக்கொப்டர் விழுந்து நொறுங்கிக் கிடப்பதையும், மீட்பு பணிகள் நடைபெற்று வருவதையும் படங்களில் காணலம்.

தைபே,ஜன.04

தைவானில் ஹெலிக்கொப்டர் விபத்தில் அந்த நாட்டின் இராணுவத் தளபதி ென் யி மிங் உள்பட படை உயர் அதிகாரிகள் 8 பேர் பலியாகினர்.

தைவான் நாட்டின் தலைநகர் தைபேயில் உள்ள சாங்சன் விமானப்படை தளத்தில் இருந்து நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி காலை 8.07 மணிக்கு 'யூ.எச். 60எம்' ரக ஹெலிக்கொப்டர் புறப்பட்டு சென்றது.

ஹெலிக்கொப்டரில் அந்த நாட்டின் இராணுவத் தளபதி ென் யி மிங் (வயது 62) உடன் மூத்திராணுவ அதிகாரிகள் 13 பேர் பயணம் செய்தனர். அவர்கள் நாட்டின் வடகிழக்கு பகுதியில் டோங்காவ் தீவில் உள்ள இராணுவத் தளத்துக்குச் சென்று கொண்டிருந்தனர்.

ஹெலிக்கொப்டர் புறப்பட்டு சென்ற 13 நிமிடங்களுக்கு பிறகு கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. இதையடுத்து இராணுவ தளபதியுடன் மாயமான ஹெலிக்கொடரைத் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன.

விமானப்படைக்குச் சொந்தமான இருபதுக்கும் மேற்பட்ட ஹெலக்கொப்டர்கள் மற்றும் சிறிய விமானங்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டன. இதில் நியூ தைபே சிட்டி நகருக்கு அருகே உள்ள மலைப்பாங்கான பகுதியில் ஹெலிக்கொப்டர் விழுந்து நொறுங்கிக் கிடப்பது கண்டுப்பிடிக்கப்பட்டது.

இந்தக் கோர விபத்தில் இராணுவத் தளபதி ஷென் யி மிங் உள்பட 8 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். 5 பேர் மட்டும் காயங்களுடன் உயிர் தப்பினர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு உள்ளனர். இந்த விபத்து குறித்து விமானப்படை மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், “ஹெலிக்கொப்டர் நடுவானில் பறந்தபோது மோசமான வானிலை காரணமாக தொடர்ந்து பயணிக்க முடியாத சூழல் ஏற்பட்டது.

எனவே விமானி ஹெலிக்கொப்டரை அவசரமாகத் தரையிறக்க முயற்சித்தார். அப்போது சற்றும் எதிர்பாராத விதமாக ஹெலிக்கொப்டர் தரையில் விழுந்து நொறுங்கியது” என்றார்.

தைவான் நாடு அதிபர் தேர்தலுக்குத் தயாராகி வரும் நிலையில் ஹெலிக்கொப்டர் விபத்தில் அந்த நாட்டின் இராணுவத் தளபதி உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஹெலிகாப்டர் விபத்தைத் தொடர்ந்து அந்த நாட்டின் அதிபர் சாய் இங் வென் நேற்று தனது தேர்தல் பிரசாரத்தை ரத்துச் செய்தார். விபத்தில் உயிரிழந்த இராணுவத் தளபதி ஷென் யி மிங் மற்றும் இராணுவ அதிகாரிகளின் குடும்பங்களுக்கு அவர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பேஸ்புக் பதிவில் 'இராணுவத் தளபதி ென் யி மிங் ஒரு சிறந்த, திறமையான தளபதியாக இருந்தார், அதே போல் அனைவராலும் விரும்பப்பட்ட மற்றும் மதிக்கப்பட்ட ஓர் அதிகாரியாக இருந்தார். அவரது இறப்பு நமக்கு மிகுந்த துயரத்தை அளித்து இருக்கிறது” எனத் தெரிவித்துள்ளார்.

# பழி தீர்த்தது அமெரிக்கா!

## ஈரான் இராணுவப் புரட்சிப் படைத் தளபதி உட்பட 7 முக்கியஸ்தர்கள் துல்லியமான றொக்கட் தாக்குதலில் வாகனங்களுடன் சிதறுண்டனர்







அமெரிக்கப் படைகள் பக்தாத் விமான நிலையத்தில் மிகத் துல்லியமாக நடத்திய வான்வழி றொக்கட் தாக்குதலில் ஈரான் இராணுவப் புரட்சிப் பாதுகாப்பு படையின் தளபதி காசிம் சோலிமானி, உளவுப்பிரிவு தலைவர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள சர்வதேச விமான நிலையத்தின் மீது றொக்கெட் குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால், விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு கார்கள் வெடித்துச் சிதறின. விமான நிலையத்தில் சரக்குகள் கையாளும் பகுதியில் றொக்கெட்டுகள் விழுந்து வெடித்தன.

இந்த தாக்குதலில், ஈரானிய புரட்சிப் பாதுகாப்புப் படையின் குத்ஸ் படைப்பிரிவு தளபதி காசிம் சோலிமானி, ஹஷீத் கிளர்ச்சியாளர் குழுவின் முக்கிய கொமாண்டர் அபு மகாதி உள்ளிட்ட 7 பேர் கொல்லப்பட்டனர்.

சமீபத்தில் நடந்த அமெரிக்கத் தூதரகத் தாக்குதலை இந்த இராணுவக்குழு நடத்தியதாக அமெரிக்கா கூறி வந்தது.

ஈரான் இராணுவத் தளபதி கொல்லப்பட்டமையை உறுதி செய்த பென்டகன், அமெரிக்க அதிபர் டிரம்பின் உத்தரவின்பேரில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறியுள்ளது. வெளிநாடுகளில், அமெரிக்கர்களின் நலனை காக்கும் வகையில், அதிபர் ட்ரம்ப் பேரில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், காசிம் சுலைமானி, அமெரிக்காவால் பயங்கரவாதி என அறிவிக்கப்பட்டவர். அப்படி அறிவிக்கப் பட்ட்வர்களே கொல்லப்பட்டனர் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. ஈராக் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில், அமெரிக்கர்கள் மீது தாக்குதல் நடத்த சுலைமானி திட்டமிட்டிருந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பல ஆண்டுகளாக பனிப்போர் நிலவி வந்த நிலையில், இந்தத் தாக்குதல் இரு நாடுகளுக்கு இடையேயான புது மோதலுக்கு தொடக்கமாக அமைந்துள்ளது. ஈரானுக்கு ஆதரவாக ரஷ்யா உள்ளிட்ட அமெரிக்க எதிர்ப்பு நாடுகள் ஒன்றிணையும் பட்சத்தில் அது மூன்றாம் உலகப் போருக்கான தொடக்க புள்ளியாக இருக்கும் என்றும் சர்வதேச நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

விமானத்தில் வந்திறங்கிய சுலைமானி அணியினரை உச்சப் பாதுகாப்போடு அவரது சகாக்கள் அழைத்துச் சென்றபோதே அதனை மிக நுணுக்கமாக நோட்டமிட்டு, உளவு பார்த்து, பின் தொடர்ந்து அவதானித்து, கனகச்சிதமான நேரத்தில் அவரின் வாகன அணியை துல்லியத் தாக்குதல் மூலம் சிதறடித்துக் காரியத்தை ஒப்பேற்றியிருக்கின்றது அமெரிக்க உளவுப் பிரிவு.

காலைக்கதிர்
Kalaikathir



‘குளோபல் தமிழ்’ இணையத்தில் ராஜா பரமேஸ்வரி எழுதும் தொடர் கட்டுரையின் முதல் அங்கம் இது.

# ஜனாதிபதி கோட்டாவுக்கு 19 ஆவது திருத்தம் தொடர்ந்தாலும் சிக்கல்; துறந்தாலும் சிக்கல்!

யுத்தம், கொலைகள், காணாமல் போதல்கள், வெள்ளைவான் கடத்தல்கள் போர் குற்றம் எனப் பல நூறு குற்றச்சாட்டுக்களைத் தாண்டி தனிச் சிங்கள வாக்குகளினால் தேர்ந் தெடுக்கப்படும் இலங்கையின் முதலாவது ஆட்சி யாளராக – ஜனாதிபதியாக – கோட்டாபய ராஜபக்ஷ தெரிவாகி உள்ளார்.

அரசியல்வாதியாக, கட்சிப் பிரமுகராக அல்லாத முன்னாள் இராணுவ அதிகாரி, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் என்ற இலங்கையின் அரச அதிகாரி ஒருவர் வரலாற்றில் தான் எதிர்கொண்ட முதலாவது தேர்தலிலேயே பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.

ராஜபக்ஷ குடும்ப அரசியலின் வாரிசு, யுத்தத்தை வெற்றிகொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் தம்பி என்ற கோதாவில் தேர்தலில் போட்டி யிட்டாலும், யுத்த வெற்றியின் மூலகர்த்தா, ஆளுமை மிக்கவர், தற்துணிவுடன் முடிவுகளை மேற்கொள் பவர், ஒழுக்கசீலர் என்ற அவரின் தனிப்பட்ட ஆளுமைகளும், ஈஸ்டர் தாக்குதல்களால் மீண்டும் நொறுங்கிப்போன சிங்கள மக்களின் மனங்களில் (ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கியில் 8 சதவீதத்தை கொண்டு இருந்த படித்த உயர்வக்க

கிறீஸ்தவர்கள் உள்ட்ட சிங்கள மக்கள்) தம்மைக் காக்கக் கூடிய மீட்பர் கோட்டாபயவே என்ற நம்பிக் கையும், பெரும்பான்மை சிங்களவர் மத்தியில் அவரை முன்னிறுத்தின. அவையே அவரின் வெற்றியின் முக்கிய காரணங்களாகவும் அமைந்தன.

விசேடமாக யுத்தத்தின் பின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷப்ஆட்சிக் காலத் திலும், பின்வ்நல்லாட்சிக் காலத்திலும் குழம் பிக் கிடந்த சிங்கள தேசத்தை அதன் குளறு படிகளை சீர்செய்வதற்கும், தூக்கி நிறுத்து வதற்கும் ஒரு ’டிசிப்பிளீன் மாஸ்ரர்’, கட்டுக் கோப்பானவர், உத்தரவுகளைப் பிறப்பித்து நடைமுறைப்படுத்தக் கூடிய கறாரானவர் தேவை எனப் பெரும்பான்மை மக்கள் விரும் பியிருந்தார்கள். அந்த விருப்பத்தின் வெளிப் பாடுகளும் கோட்டாபயவின் வெற்றியை

தீர்மானித்தன. அவற்றின் அடிப்படையி லேயே ஜனாதிபதியானபின் அவர் மேற்கொள்ளும் தீர்மானங்களும் நடைமுறைகளும் தொடர்கின்றன. மக்களை இலகுவில் ஈர்க்கக்கூடிய, சென்றடையக் கூடிய விடயங்களில் முதலில் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார்.

அதில் முக்கியமானது இலங்கை நிர்வாகக் கட்ட மைப்பு. மக்களின் அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணைந்த இந்த ’பீரோகிரசியை’ ஆட்டிப்படைக்கும் அரசியல்வாதிகளாலும், அதிகாரிகளாலும், சோம் பேறிகளாலும், ஊழல்வாதிகளாலும், துறைசாராத பொருத்தமற்ற ஊழியர்களாலும் மூன்று தசாப்த் தத்திற்கு மேலான யுத்த தேசத்தின் நிர்வாம், சின்ன பின்னமாகி சீரழிந்து கிடக்கின்றது. இவற்றை சீர் செய்வதற்கும், மக்களின் அன்றாட வாழிவியலில் எதிர்கொள்ளும் சிக்கல்களை நிவர்த்திப்பதிலும் கோட்டாபய தன்கவனத்தைத் தக்கவைத்துள்ளார்.

அரச திணைக்களங்களுக்கும் அலுவலகங்களுக் கும் திடீரெனச் செல்லும் கோட்டாபய அங்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அவ்விடங்க ளிலேயே தீர்வுகளையும் முன்வைக்கிறார். இந்த நடைமுறை 1990களில் ஆட்சிக்கு வந்த அடிநிலை மக்களின் நாயகன் பிரேமதாஸவிடம் இருந்தது. அதுவே பிரேமதாஸவை மக்கள் தலைவனாக்கியது.


அரச கூட்டுத்தாபனங்கள், அரச திணைக்களங் கள், மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி உள்ளிட்ட வங்கிச் சேவைகள், வெளிநாட்டு ராஜதந்திர சேவை உள்ளிட்ட நாட்டின் உயர்பதவிகளை ஆக்கிர மித்திருந்த அரசியல் நியமனங்களில் முழுக்க முழுக்க துறைசார் நிர்வாக சேவை அதிகாரிகளையும், கல்விமான்களையும் நியமிக்கும் தீர்மானகரமான முடிவை எடுத்து அதனை நடைமுறைப்படுத்தி வரு கிறார். இராஜதந்திர சேவையில் உள்ள துறை சாராத பணியாளர்களைபணிகளை முடிவுறுத்தி நாடு திரும்புமாறு பணித்துள்ளார். ஆளுநர் நிய மனங்களிலும் வயது,அனுபவம், திறமை மென் போக்கு, இனத்துவ முதன்மை ஓரளவு கடைப்பிடிக் கப்பட்டமையை காணமுடிகிறது.

வடக்கிற்கு முன்னாள் ஆளுநர் சந்திரசிறியை நியமிக்குமாறு வடக்கின் முக்கிய அரசியல்வாதி ஒரு வர் சிபாரிசு செய்த போதும் அதனை நிராகரித்துத் தமிழர் ஒருவரை ஆளுநராக நியமிக்கும் முடிவில் கோட்டாபய உள்ளார்.

கூடவே அரச நிர்வாகக் கட்டமைப்புகளுக்கு எதி ர்பார்த்ததை விடவும் ஒரு சில படை அதிகாரிகளையே நியமித்திருக்கின்றமையையும் காணமுடிகிறது.

அமைச்சர்கள், பிரதி, ராஜாங்க அமைச்சர்க ளின் தனிப்பட்ட செயலாளர்கள், உள்ளிட்ட தனிப் பட்ட நியமனங்கள் உறவினர்களுக்கு வழங்கக் கூடாது என்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தக வல்கள் கூறுகின்றன. அரச நியமனங்களில் திறமைக்கு முன்னுரிமை வழங்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களில் இருந்து ஒரு லட்சம் பேருக்கு அவர்களின் சொந்த மாவட்டங்களிலேயே வேலைவாய்ப்பை வழங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே தற்போது வெளியாகி உள்ள தகவல்களின் அடிப் படையில் வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் நிர்வாக



சேவையில் உள்ள தமிழர்களே அரச அதிபர்களாகத் தொடர்வார்கள் என ஊகிக்க முடிகிறது. கிழக்கில் மட்டக்களப்பில் தமிழ் அரச அதிபரே கடமையில் உள்ளார்.

அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச உயர் அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயணங் கள், ஆடம்பர செலவுகள், வாகனத்தொடரணி பந்தாக்கள் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு உள்ளன எனக் கூறப்படுக்கிறது.

இவை பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமு னவிற்கு வாக்குகளைச் சேர்க்கும் நடவடிக்கை களாக அமையும் என்றாலும், வெறுமனே பொதுத் தேர்தலை மட்டும் இலக்காக வைத்து மேற்கொள் ளும் நடவடிக்கைகள் போல் இவை தெரியவில்லை. காரணம், கடந்த பல தசாப்தங்களாக நிர்வாகத்து றையில் நிலவிய அரசியல் ஆதிக்க

கட்டமைப்பைத் தகர்க்கும் நடவடிக்கைகளில் கோட்டாபய ராஜபக்ஷ முனைகிறார் எனத் தென்ப டுகிறது. இந்த நடைமுறை குடும்ப அரசியல் ஆதி கத்தையும், தனது மதிப்பிற்குரிய அண்ணனின் அரசியல் ஆதிக்கத்தையும் மீறித் தொடருமா, வெற்றிபெறுமா என்பதைப் பொதுத்தேர்தலின் பின்பே கூறமுடியும்.

காரணம், 2015 இன் பின் அதிகாரத்தை இழந்து தவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவா ளர்கள், நெருங்கியவர்கள் பொதுஜன பெரமுனவை ஆட்சிப்பீடம் ஏற்றி அதிகாரத்தையும், ஆடம்பரத் தையும், அனுபவிக்கக் காத்திருந்தார்கள்.

எனினும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின் உருவாக்கப்பட்ட அமைச் சரவையில் 2015 இற்கு முன்னான ஒரு தசாப்தத் தில் முன்னணியில் இருந்த பலர் பின்தள்ளப்பட்டு முன்னையவர்களில் தெரிவு அடிப்படையில் சிலர் மேலுயர்த்தப்பட்டு உள்ளார்கள்.

அதுபோல் தேர்தலில் தோல்வி கண்டவர்கள், அரசியல்வாதிகள், ஆதரவாளர்களை அரச நிறு வனங்களுக்குத் தலைவர்களாக நியமித்து அவர் களைத் திருப்திப்படுத்தவும் கோட்டாபய முனைய வில்லை. அதனால் பொதுத்தேர்தலின் பின் இந்த நிலையை கோட்டாபய தொடர்ந்து தக்கவைப்பாரா, முடியுமா என்பதனையும் பொறுத்திருந்து பார்க்க வெண்டும்.

மறுபுறம் 19 ஆவது திருத்தச் சட்டத்தைத் தொடர்ந் தாலும் சிக்கல் துறந்தாலும் சிக்கல் என்ற திரிசங்கு நிலைக்கும் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தள்ளப்பட்டு உள்ளார்.

குறிப்பாகப் பொதுஜன பெரமுன பொதுத்தேர்த லில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் அண்ணன் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகத் தேர்வுசெய்யப் படுவார். 19ஆவது திருத்தச் சட்டம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் வரையறை அற்ற அதி காரங்களைக் கட்டுப்படுத்தி நாடாளுமன்றினதும் பிரதமரதும் அதிகாரத்தை அதிகரித்திருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட அமைச்சர் பொறுப்புக்களையோ வரையறுக்கப்பட்ட திணைக் களங்களைத் தவிர்ந்த மேல திக திணைக்களங்களையோ தனது கட்டுப்பாட்டுள் வைத்தி ருக்க முடியாத 19ஆவது

திருத்தச் சட்டம் ஜனாதிபதி கோட்டாபயவுக்குச் சற்று அசௌகரியமாகவே இருக் கும் என்பதில் ஐயம் இல்லை. தவிரவும் பொதுச்சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு, அரசமைப்புச் சபை என்பனவும் சற்று தலை யிடியை உண்டுபண்ணுப வையே. இதனால் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பல

அம்சங்களை நீக்கவே ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ முயற்சிகளை மேற் கொள்வார்.

எனினும் தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் நடைபெற வுள்ளபொதுத்தேர்தல், ஜனாதிபதி தேர் தலின் அடிப்படையிலான கணக்குச் சூத் திரத்தை போன்றதல்ல. ஜனாதிபதி தேர்தல் கட்சிகளின் செல் வாக்கு என்பதற்கு அப்பால் தனிப்பட்ட ஆளுமையும் செல்வாக்கு செலுத்தி தனிநபர்களை நோக்கிய வாக்க ளிப்பாக அமைகிறது.

ஆனால் பொதுத்தேர்தல் என்பது கிரா மம், நகரம், மாநகரம், மாகாணங்கள் என்ற அடிப்படையில் ஒவ்வொரு கட்சிகளி னதும், அக்கட்சிகளில் போட்டியிடும் நபர் களினதும் வாக்குகளின் ஊடாக நிர்ணயிக் கப்படுகின்றன. அதன் அடிப்படையில் பார்த்ததால் கடந்த ஜனாதிபதி தேர்தலில் 14 லட்சம் வரையிலான வாக்குகளையே ஜனாதி பதியை ஆதரித்த பொதுஜன பெரமுன அதிகமாகப் பெற் றுள்ளது.

இந்த வாக்கு வித்தியாசம் நாடாளுமன்ற ஆச னங்களில் பாரிய வேறுபாடுகளை ஏற்படுத்தாது. ஏற்படுத்த வேண்டுமாயின் மேலும் வாக்குகளை பொதுஜனபெரமுன பெறவேண்டியிருக்கும். அதற்கு விரும்பியோ விரும்பாமலோ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்டுவரும் எதிர்மறையான விடயங்கள் தாக்கங்களை உண்டுபண்ணும் என் பதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை பொதுஜன பெரமுனவுக்கு கிடைக்கப் பெறாவிடின் அதனை சுவீகரிக்க ஏனைய கட்சிகளி டம் இருந்து ஆதரவைப் பெறவேண்டும். அல்லது அந்தக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர் களை விலைக்கு வாங்க வேண்டிய நிலை ஏற்படும்.

ஆனால்தற்போது அதிகரித்துவரும் சிறுபான்மை யினருக்கு எதிரான செயற்பாடுகள் சிறுபான்மைக் கட்சிகளிடம் இருந்து ஆதரவை பெறமுடியுமா என்ற கேள்வியை ஏற்படுத்தி இருக்கிறது.

தவிரவும் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுக்குச் செக் வைக்கக்கூடிய நாடாளுமன்றின் அதிகாரம் வீழ்த்தப்படுவதை எதிர்க்கட்சிகள், சிறுபான்மைக் கட்சிகள் விரும்புமா என்ற கேள்வியும் எழுகின்றது.

இவற்றுக்கு அப்பால் அண்ணன் மஹிந்த ராஜ பக்ஷவும், அவருடன் நெருக்கமாக இருப்பவர் களும், புதிய ஆட்சியில் பாதிக்கப்பட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரும், பொதுஜனபெரமுனவின ரும் வெளிப்படையாகக் கூறாவிடினும் உள்ளார்ந்த வாரியாக 19ஆவது திருத்தச் சட்டத்தை முழுமை யாக மாற்ற விரும்புவார்களா என்ற சந்தேகம் பல ரிடம் எழுந்துள்ளது. காரணம் ரணில் விக்கிரமசிங்க வின் 19ஆவது திருத்தச் சட்டம் தனிச் சிங்கள வாக் குகளால் ஜனாதிபதியாகி உள்ள கோட்டாபய ராஜ பக்ஷவிற்குச் செக் வைத்திருப்பதோடு பல தலையி டிகளை உருவாக்கி இருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

அந்த வகையில் பொது எதிரியை வீழ்த்தத் தனது சகோதரர் கோட்டாபய ராஜக்ஷவை ஜனாதிபதி வேட் பாளராக முன்னிறுத்த வேண்டும் என்ற தேர்வைத் தவிர மாற்று வழியில்லை என்ற நிலையில் குடும்ப மாகவும் கட்சியாகவும் கோட்டாபய ராஜபக்ஷ முன் னிறுத்தப்பட்டார்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# ஜே.ஆர் காலம் திரும்பும்!

## ஜே.வி.பி. எச்சரிக்கிறது

கொழும்பு, ஜன. 04

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவால் தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 22 ஆவது திருத்தம், மீண்டும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் காலத்துக்குப் பயணிக்கச் செய்யும் என்று, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க எச்சரித்துள்ளார்.

தனது டுவிட்டர் வலைதளத்தில் பதிவொன்றை இட்டுள்ள அவர், நீதிபதிகள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பதவிகளுக்கான நியமனங்கள் ஜனாதிபதியால் வழங்கப்படுவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கை பொதுமக்களின் விருப்பத்துக்கு அமைய ஸ்தாபிக்கப்பட்ட சுயாதீன அமைப்புக்



களைச் சீர்குலைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த நடவடிக்கை சர்வாதிகார போக்கு என்று கூறியுள்ள அவர் இந்த யோசனை தோற்கடிக் கப்படவேண்டும் என்றும் மேலும் கூறியுள்ளார். (ஐ)

# வருண பிரியந்த லியனகே எதிர்க்கட்சி ஆசனத்தில்!

கொழும்பு, ஜன. 04

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட நாடாளுமன்றஉறுப்பினர் வருண பிரியந்த லியனகே எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்தார்.



ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா காலமானதைத் தொடர்ந்து வெற்றிடமாகியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட்ட வருண பிரியந்த லியனகே நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

4 ஆவது நாடாளுமன்றத்தின் 8 ஆவது கூட்டத் தொடர் நேற்று முற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது (ஐ)

# யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபராக கபில கடுவத்த நேற்று பதவியேற்பு





யாழ்ப்பாணம், ஜன. 04

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக கபில கடுவத்த பதவியேற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் அவர் தனது கடமைகளை நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.05 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்தார்.

மூத்த பொலிஸ் அத்தியட்சகராக நீர்கொழும்பில் கடமையாற்றிய அவர், அண்மையில் பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

பதவி உயர்வுடன் முதன் முறையாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த மகேஷ் சேனாரத்ன, கொழும்பு குற்றப் பிரிவுக்கு மாற்றலாகிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முதல் பெண் விசாரணை இயக்குநர்



கொழும்பு, ஜன. 04

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் புதிய விசாரணை இயக்குநராக மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர் பத்மினி வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் துறையின் விசாரணை இயக்குநராக ஒரு பெண் அதிகாரி நியமிக்கப்படுகின்றமைஇதுவே முதல் முறை.

1997 ஆம் ஆண்டில் மகளிர் துணை ஆய்வாளராக பொலிஸ் சேவையில் சேர்ந்த இவர், 23 ஆண்டுகள் சேவையை முடித்துள்ளார்.

அவர் முன்னர் பொலிஸ் மருத்துவ சேவைகள் பிரிவின் உதவி கண்காணிப்பாளராகவும், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் உதவி கண்காணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

அவர் 2016 முதல் இலஞ்சம் ஆணைக்குழு விசாரணை துணை இயக்குநராக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிங்கப்பூர் நிறுவனத்துக்கு வழங்கப்படும் அரச காணி!

கொழும்பு, ஜன. 04

கொழும்பு ங்ரில்லா ஹோட்டலுக்கு அருகில் உள்ள மூன்று ஏக்கர் அரச காணியைச் சிங்கப்பூர் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று ஜே.வி.பி. ஊடகப்பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

4.3 கோடி அமெரிக்க டொலர்களுக்கு எந்தவித விலைமனுக்கோரலும் இல்லாது இவ்வாறு குத்தகைக்கு வழங்க அமைச்சரவையில் தனிப்பட்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மத்தள விமான நிலையத்தையும் சர்வதேச நிறுவனமொன்றுக்கு வழங்கவும் அரசு தீர்மானம் எடுக்கின்றதென்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கொழும்பு ங்ரில்லா ஹோட்டலுக்கு அருகில் உள்ள மூன்று ஏக்கர் அரச நிலத்தை சிங்கப்பூர் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதால் நாட்டுக்கு எவ்வித நட்டமும் ஏற்படப்போவதில்லையென அமைச் சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக மக்கள் அதிருப்தி அடையத் தேவையில்லையென்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)



# 400 ஓட்டங்கள் சாதனையை தகர்க்க யாருக்கு வாய்ப்பு?

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்சில் 400 ஓட்டங்கள் என்ற தனிவீரரின் அதிகபட்ச சாதனை ஓட்டமான தனது 400 ஓட்டங்கள் என்ற சாதனையை தகர்க்க, யாருக்கெல்லாம் வாய்ப்பு உள்ளது என்பதனை ஜாம்பவான் பிரையன் லாரா கூறியுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்ஸில் 400 ஓட்டங்கள் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் மேற்கிந்திய தீவுகளின் ஜாம்பவான் பிரையன் லாரா ஆவார்.

2004ஆம் ஆண்டு என்டிகுவாவில் வைத்து இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் ஜாம்பவான் பிரையன் லாரா ஆட்டமிழக்காது 400 ஓட்டங்களை அடித்து இந்த சாதனையை பதிவு செய்துள்ளார்.

15 வருடங்கள் ஆகியும் இந்த சாதனையை யாராலும் முறியடிக்கவில்லை. எனினும், அண்மையில் பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் டேவிட் வோர்னர் இந்தச் சாதனையைத் தகர்ப்பார் என எதிர்பார்க்கப் பட்டது.

வோர்னர் முச்சதம் கடந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது, வெற்றியை கருதி அணித்தலைவர் டிம் பெய்ன், போட்டியை இடைநிறுத்தியதால் அவர் 335 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது விடை பெற்றார்.

இந்நிலையில் தற்போதுள்ள வீரர்களில் இவர்களால் என்னுடைய சாதனையை ஒரு வேளை முறியடிக்க முடியும் என லாரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து லாரா கூறுகையில் 4ஆவது இடத்தில் களம் இறங்கி விளையாடி வரும் ஸ்டீவ் ஸ்மித்தால் என்னுடைய சாதனையை



முறியடிக்க மிகவும் கடினமானது. அவர் சிறந்த வீரர்தான், ஆனால் பந்து வீச்சாளர்களுக்கு எதிராக ஆதிக்கம் செலுத்த அவரால் விளையாட முடியாது. டேவிட் வார்னர் போன்ற வீரர்களால் உறுதியாக முடியும்.

விராட் கோஹ்லி முன்னதாகவே களம் இறங்கினால் அவர் எட்டிவிடுவார். அவர் மிகவும் அட்டக்கிங் வீரர். ரோஹித் சர்மாவுக்கு அவருடைய நாளாக அமைந்தால் உடைத்துவிடுவார். இவர்களால் என்னுடைய சாதனையை முறியடிக்க வாய்ப்புள்ளது என கூறியுள்ளார்.

131 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள லாரா, 48 அரைசதங்கள், 34 சதங்கள், 2 முச்சதங்கள் அடங்களாக 11953 ஓட்டங்களை குவித்துள்ளார். சராசரி 52.88 ஆகும்.

மேலும், 299 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள லாரா, 63 அரைசதங்கள், 19 சதங்கள், அடங்களாக 13086 ஓட்டங்களை குவித்துள்ளார். சராசரி 40.48 ஆகும்.

எண்ணிலடங்காத சாதனைளைகளுக்கு சொந்தக்காரரான லாரா, மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களை குவித்த இரண்டாவது வீரர், மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக அதிக போட்டிகளில் விளையாடிய வீரர், எட்டு முதற்தர போட்டிகளில் ஏழு சதங்கள் அடித்த ஒரே வீரர், டெஸ்ட் அணித்தலைவராக அதிக ஓட்டங்கள், ஐந்து வெவ்வேறு ஆண்டுகளில் 1000 டெஸ்ட் ஓட்டங்கள், வேகமான 10000 மற்றும் 11000 டெஸ்ட் ஓட்டங்கள் போன்ற பல சாதனைகளை பதிவு செய்துள்ளார்.(ஐ)



# ராஜாஹி ரோயல்ஸ் அணி வெற்றி!

பங்களாதேஷ் பிரிமீயர் லீக் ரி – 20 தொடரின் 29ஆவது லீக் போட்டியில், ராஜ்ஹாஹி ரோயல்ஸ் அணி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

சில்ஹெட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், ராஜ்ஹாஹி ரோயல்ஸ் அணியும், ரங்க்பூர் ரேஞ்சர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ரங்க்பூர் ரேஞ்சர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய ராஜ்ஹாஹி ரோயல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 179 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரவி பொபாரா ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும், சொயிப் மாலிக் 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ரங்க்பூர் ரேஞ்சர்ஸ் அணியின் பந்துவீச்சில், முஷ்டபிசுர் ரஹ்மான் 2 விக்கெட்டுகளையும், அரபாத் சனி, மற்றும் மொஹமட் நபி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 180 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ரங்க்பூர் ரேஞ்சர்ஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 149 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் ராஜ்ஹாஹி ரோயல்ஸ் அணி 30 ஓட்டங்களால் வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஃபாஸில் மஹ்மூத் 34 ஓட்டங்களையும், டொம் அபெல் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ராஜ்ஹாஹி ரோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், மொஹமட் நவாஸ், சொயிப் மாலிக் மற்றும் கம்ரூல் இஸ்லாம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், மொஹமட் இர்பான் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 29 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 4 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட ரவி பொபாரா தெரிவு செய்யப்பட்டார்.

# சிட்னி சிக்ஸர்ஸ் அணி வெற்றி!

பிக் பேஷ் ரி – 20 தொடரின் 20ஆவது லீக் போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணியும், மெல்பேர்ன் ரெனிகேட்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மெல்பேர்ன் ரெனிகேட்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய மெல்பேர்ன் ரெனிகேட்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 153 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சேம் ஹார்பர் 45 ஓட்டங்களையும், சோன் மார்ஷ் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் பந்துவீச்சில், ஜெக்ஸன் பேர்ட் மற்றும் லோயிட் போப் ஆகியோர்



தலா 2 விக்கெட்டுகளையும், பென் துவார்ஷுயிஸ் மற்றும் டொம் கர்ரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 154 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி, 19.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், சிட்னி சிக்ஸர்ஸ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜேம்ஸ் வின்ஸ் 41 ஓட்டங்களையும், டேனியல் ஹியுஜஸ் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மெல்பேர்ன் ரெனிகேட்ஸ் அணியின் பந்துவீச்சில், கேமரூன் போய்ஸ் மற்றும் டொம் ஹென்ரிவ்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 26 பந்துகளில் 1 சிக்ஸர் 3 பவுண்ரிகள் அடங்களாக 41 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட ஜேம்ஸ் வின்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# டெஸ்ட் போட்டி 4 நாள்களாக குறைப்பு! இங்கிலாந்து – ஆஸ்திரேலியா ஆதரவு

டெஸ்ட் போட்டியினை நான்கு நாள்களாக குறைக்கும் எதிர்கால திட்டத்திற்கு, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபை ஆதரவு தெரிவித்துள்ளன.

இதுகுறித்து இங்கிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், 4 நாள் டெஸ்ட் போட்டியை நடத்தும் சர்வதேச கிரிக்கெட் சபையின் பரிந்துரைக்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம். அதே நேரத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டின் பாரம்பரியத்தை சவால் செய்யும் வகையிலான இந்த முடிவை எச்சரிக்கையுடன் கையாள வேண்டும்.

4 நாள் டெஸ்ட்தான் நிலையான தீர்வை ஏற்படுத்தும் என்றும் நாங்கள் நம்புகிறோம். போட்டிக்கான திட்டமிடல், வீரர்களின் பணிச்சுமை குறை போன்ற தீர்வை ஏற்படுத்தும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதற்கு சிலர் தங்களது அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர். குறிப்பாக, அவுஸ்ரேலிய டெஸ்ட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் நாதன் லியோன், அதிருப்தியை வெளியிட்டுள்ளார். 'சர்வதேச கிரிக்கெட் சபையின் இந்த திட்டம் கேலிக்குரியது' என நாதன் லியோன் கூறியுள்ளார்.

மேலும், அதேபோல் அவுஸ்ரேலிய அணியின் தலைமை பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கரும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் சௌரவ் கங்குலி, 'ஐசிசியின் பரிந்துரையை முழுவதுமாக ஆராய்ந்த பின்னர்தான் கருத்து கூற இயலும்' என்று தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்டில் ரி –20, ரி – 10 போன்ற குறுகிய ஓவர்களை கொண்ட கிரிக்கெட் தொடர்களின் வருகையால் டெஸ்ட் போட்டிக்கான மவுசு குறைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

ரி – 20 போட்டி விறுவிறுப்பாகவும், குறைந்த நேரத்தில் நடைபெறுவதால் இரசிகர்கள் ரி – 20 கிரிக்கெட்டை அதிகமாக விரும்புகின்றனர்.

எனினும், டெஸ்ட் கிரிக்கெட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளதாக பலராலும் விமர்சிக்கப்பட்ட நிலையில், சர்வதேச கிரிக்கெட் சபை பகல் –இரவு டெஸ்டை அறிமுகப்படுத்தியது. இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. ரசிகர்கள் திரண்டு வந்து டெஸ்டை ரசித்தனர்.

இந்த நிலையில் 5 நாள்கள் நடைபெறும் டெஸ்ட் போட் டியை 4 தினங்களாக குறைக்க ஐ.சி.சி. பரிசீலித்து வருகிறது.

2023ஆம் ஆண்டு தொடங்க உள்ள டெஸ்டை சம்பியன்ஷிப் தொடரில் இருந்து 4 நாள் டெஸ்டை கட்டாய நடைமுறைக்கு கொண்டுவர ஐ.சி.சி. திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் பல நாட்கள் கூடுதலாக கிடைக்கும். இந்த நாட்களில் கூடுதலாக சர்வதேச தொடர்களை நடத்தி வருமானம் ஈட்டலாம் என ஐசிசி நினைக்கிறது.

4 நாள் டெஸ்ட் கட்டாயமாக்கப்படும் பட்சத்தில் 2 நாள்கள் விதிமுறையில் மாற்றம் செய்யப்படும். தற்போது 5 நாள் டெஸ்டில் நாள் ஒன்றுக்கு அதை வைத்து வேறு போட்டிக்களை நடத்தி கொள்ளலாம் என்பது ஐ.சி.சி. யின் வருங்கால திட்டங்களில் ஒன்றாக இருக்கிறது.

மேலும், ஓவர்களின் எண்ணிக்கையும், அதிகரிக்கப்படுகிறது. வழக்கமாக டெஸ்டில் நாள் ஒன்றுக்கு 90 ஓவர் வீசப்படும். இது 98 ஓவர்களாக அதிகரிக்கப்படும். இதன் மூலம் 58 ஓவர்களை மட்டுமே இழக்க முடியும். கூடுதல் ஓவர்களை வீசுவதன் மூலம் டெஸ்ட் முடிவில் பாதிப்பு ஏற்பாடாது என்று கூறப்படுகிறது.



# வன்னி, மட்டக்களப்பில் களமிறங்கவுள்ளோம்!



மனோ கணேசன் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 04

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் வன்னி, மட்டக்களப்பு மாவட்டங்களில் களமிறங்கப் போவதாகத் தமிழ் முற்போக்குக் கூட்டணி அறிவித்துள்ளது.

அந்தக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இதனை தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வேண்டுகோளின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாகத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பு, கம்பஹாவில் களமிறங்கவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு எடுத்துள்ளதாக வெளியான தகவலை அடுத்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## பலாலி விமானக் கட்டணத்தைக் குறைக்க டக்ளஸ் அமைச்சரவையில் வலியுறுத்து!



கொழும்பு, ஜன. 04

பலாலி விமான நிலையத்தில் இருந்து இந்தியா செல்லும் பயணிகளிடம் விமான நிலையக் கட்டணமாக 12 ஆயிரம் ரூபா அறவிடப்படுவது குறித்து நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆட்சேபனை தெரிவித்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

கொழும்பில் இருந்து சென்னை செல்லும் பயணிகளிடம் விமான நிலையக் கட்டணமாக ஆறாயிரம் ரூபாவே அறவிடப்படுகிறது . அதேபோல சென்னையில் இருந்து பலாலிக்கோ அல்லது கொழும்புக்கு வருவதாயின் அங்கு இந்திய ரூபா ஐயாயிரம் மட்டுமே அறவிடப்படுகிறது. ஆனால் பலாலியில் இருந்து செல்லும்போது கொழும்புக் கட்டணத்தை விட இரு மடங்கு அதிகரித்த கட்டணம் அறவீடு செய்யப்படுவது நியாயமானது அல்ல.எனவே அதனை உடனடியாக குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்தியபோது அந்த விடயத்தை உடனடியாக கவனத்திற் கொள்வதாக விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உறுதியளித்துள்ளார். (ஐ)

## மட்டக்களப்பு ஊடகவியலாளரை கைது செய்யச் சென்ற பொலிஸ்!

### குடும்பத்தினருக்கு அச்சுறுத்தல்

மட்டக்களப்பு, ஜன. 04

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளரும், சுயாதீன ஊடகவியலாளருமாகிய செ.நிலாந்தனைக் கைது செய்வதற்காக நேற்று முன்தினம் இரவு, அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார், அவர் இல்லாததால் குடும்பத்தினரை அச்சுறுத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு 9.10 மணியளவில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளரும் சுதந்திர ஊடகவியலாளருமாகிய செல்வக்குமார் நிலாந்தனின் செங்கலடி ரமேஸ்புரம் வீட்டுக்குச் சிவில் உடையில் சென்ற ஏறாவூர் பொலிஸார் அவரைக் கைது செய்து கொண்டு போக முயற்சித்துள்ளனர்.

ஊடகவியலாளர் வீட்டில் இல்லாத காரணத்தால் வீட்டாரை அச்சுறுத்தியதோடு ஊடகவியலாளர் செல்வக்குமார் நிலாந்தனை ஏறாவூர் பொலிஸிக்கு வருமாறு குடும்பத்தாரை அச்சுறுத்திச் சென்றுள்ளனர்.

இரவு வேளையில் சிவில் உடையில் பொலிஸார் சென்றதால் ஊடகவியலாளரின் குடும்பத்தினர் மிகுந்த அச்சத்தில் உள்ளனர்.

இதேவேளை ஊடகவியலாளர் நிலாந்தனை பொலிஸார் ஏன் கைது செய்ய முயற்சி செய்கின்றனர் என்பது குறித்து எந்தத் தகவலையும் குடும்பத்தினரிடம் பொலிஸார் கூற மறுத்துள்ள நிலையில் அவரது குடும்பத்தினர் மிகுந்த அச்சத்தில் உள்ளனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

## கணக்கு காட்டாத 18 கட்சிகள்!

கொழும்பு, ஜன. 04

அடுத்த இரண்டுவாரங்களுக்குள் கணக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகளின் பதிவை இரத்துச் செய்யத் தேர்தல்கள் ஆணைக் குழு முடிவு செய்துள்ளது.

கணக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்காத 18 அரசியல் கட்சிகளுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் படி பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு, தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தல் விடுத்திருந்தது.

இலங்கையில் தற்போது 74 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன. அவற்றில் 18 அரசியல்கட்சிகள் தவிர்ந்த ஏனையவை, கணக்கு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளன. இதுவரை அறிக்கை சமர்ப்பிக்காத கட்சிகளுக்கே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இன்ரர்போலின் இலங்கை அதிகாரிக்கும் தடையாம்

கொழும்பு, ஜன. 04

இன்டர் போலின் தகவல் பாதுகாப்பு அதிகாரியாக (Data Protection Officer) இலங்கையில் செயற்பட்ட சி.ஐ.டி.யின் பொலிஸ் அத்தியட்சர் ரஞ்ஜித் வெதசிங்கவுக்கும் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் இலங்கையில் உள்ள இன்ரர்போல் கிளையின் பொறுப்பாளராகச் செயற்பட்ட அவரது பணியின் தன்மையின் அடிப்படையில் அவருக்கு எதிராக அவ்வாறான தடைகளைப் பிறப்பிப்பது பொருத்தமானதல்ல எனப் பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந் நிலையில் சி.ஐ.டி.யின் 704 பேருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணம் தொடர்பிலான தடைகள், தனக்கெதிராகவும் முன்வைக்கப்பட்டுள்ளமை ஊடாக தமது உரிமை மீறப்படுவதாக கூறி பொலிஸ் அத்தியட்சர் ரஞ்ஜித் வெதசிங்க மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடொன்றினையும் பதிவு செய்துள்ளார்.

இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து, இலங்கையில் உள்ள இன்ரர்போல் பொலிஸ் பிரிவின் பொறுப்பாளராகவும், சி.ஐ.டி. எனப்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராகவும் செயற்பட்டு வந்த பொலிஸ் அத்தியட்சர் ரஞ்ஜித் வெதசிங்க, பொலிஸ் தலைமையகத்தின் நலன்புரி பிரிவின் பணிப்பாளராக இடமாற்றப்பட்டுள்ளார். (ஐ)

## ஜனாதிபதி கோட்டாவுக்கு 19 ஆவது திருத்தம் .....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் தற்போது அண்ணனின் ஆலோசனைகள் கவனத்தில் கொள்ளப்பட்டாலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பல தற்துணிவான முடிவுகள், கறாரான செயற்பாடுகள் குறித்து அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

அதனால் தமது அரசியல் பற்றியும், தமது எதிர்கால நலன்கள் பற்றியும், வாரிசுகளின் தொடர்ச்சி பற்றியும் சிந்திக்கும் ஒரு தரப்பினருக்கும், கட்டுக்கோப்பான நாடு, ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாகம், தேசத்தின் அபிவிருத்தி பற்றி சிந்திக்கும் நிர்வாகத் திறன் கொண்ட ஜனாதிபதிக்கும் இடையிலான முரண்பாடு தொடரத்தான் போகிறது.

இதனால் தற்போதைய அரசியல் சூழலில் 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி நாடாளுமன்றின் அதிகாரத்தை வீழ்த்தி, இன்னும் 5 வருடத்திற்கு அசைக்க முடியாத ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வரையறை அற்ற அதிகாரத்தை வழங்க பொதுஜன பெரமுன, சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஆளும் தரப்பு கட்சிகளின் உறுப்பினர்களே ஆதரவளிப்பார்களா?. – என்ற கேட்கும் நிலை உருவாகி வருகிறது.

இவ்வாறானதோர் அரசியல் சூழலில், சிங்களதேசத்தை வெற்றிகொண்ட, வெற்றியை தக்க வைக்க முயன்று கொண்டு இருக்கின்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தான் நினைக்கும் பிளவுபடாத தேசத்தை உருவாக்க, மனங்களால் பிளவுண்டு கிடக்கும் தமிழ்த் தேசத்தை வெல்ல முனைவாரா? வெல்வாரா?



# யாழ்.பல்கலை வளாகத்தில் பயன்தரு மரங்கள் நடுகை

யாழ்ப்பாணம், ஜன. 04

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட 39ஆம் அணி மாணவர்களால் பல்கலைக்கழக வளாகத்தினுள் ஒலிவ், சமூத்திரக்கண்ணி, மகிழ் போன்ற பயன்தரு மரங்கள் நடப்பட்டன.

இந்த மரநடுகை நிகழ்வுக்கு கலைப்பீடப் பீடாதிபதி கலாநிதி சுதாகர், இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி சுகந்தினி முரளிதரன், மாணவ ஒழுக்காற்று அதிகாரி கஜன், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கிரிசாந்த் பூங்கா பராமரிப்புப் பிரிவு மேற்பார்வையாளர் கருணைநாயகம், 39ஆம் அணி மாணவப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தனர். (ஐ)





## ஊடகப் பேச்சாளர்கள் நியமனம்

கொழும்பு, ஜன. 04

இராஜாங்க அமைச்சர்களான கெஹலிய ரம்புக்வெல மற்றும் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் அரசின் ஊடகப் பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.


நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார். (ஐ)

## ஆபிரிக்காவுக்கான தூதுவராக தமிழரை நியமித்தார் மஹிந்த

கொழும்பு, ஜன. 04

ஆபிரிக்காவுக்கான விசேட தூதுவராக வேலுப்பிள்ளை கணநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் இந்த நியமனம் வழங்கப்பட்டது.



வேலுப்பிள்ளை கணநாதன் உகண்டாவில் இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றுகிறார்.

பிரபல தொழிலதிபரான கணநாதன், உகாண்டாவை வதிவிடமாகக் கொண்டுள்ளார்.

இவர் பண்டாரவளை புனித தோமஸ் கல்லூரி மற்றும் புனித ஜோசப் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்
ஒன்றியம் பெருமையுடன் வழங்கும்
மாபெரும் தமிழ்விழா – 2019
தமிழமுதம்
"மொழிதனைக் கடையும் இளையவர் பயணம்"
08.01.2020
மு.ப 08.05
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகம்
அனைவரும் வாரீர்

# இலகு ரக விமானம் வீழ்ந்து நால்வர் சாவு!

## ஹப்புத்தளையில் நேற்றுச் சம்பவம்







கொழும்பு, ஜன. 04

ஹப்புத்தளைப் பகுதியில் இலங்கை விமானப்படைக் குச் சொந்தமான இலகுரக விமானமொன்று ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. அதில் பயணித்த நால்வர் உயிரழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

வீரவில பகுதியில் இருந்து பயணித்த இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான வை12 ரக விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது என்று விமா னப்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த விமான விபத்து இடம்பெற்ற பகுதியில் இருந்து 4 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இருவர் விமானிகள் என்றும் மற்றைய இருவர் கண்காணிப்பாளர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை –

ஹப்புத்தளையில் இடம்பெற்ற விமான விபத்து தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்த விபத்தில் உயிரிழந்த விமானப் படையைச் சேர்ந்த நால்வரின் குடும்பத்தினருக்கும் அரசு சார்பில் அனுதாபம் தெரிவித்து கொள்வதாகவும் சமல் ராஜபக்ஷ கூறினார்.

விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறிப்படாத நிலையில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## மட்டக்களப்பில் கார் மோதி ஒருவர் பலி; இருவர் காயம்!

மட்டக்களப்பு, ஜன. 03

பெண் ஒருவர் செலுத்திய கார் வேகக் கட்டுப்பாட்டை இழுந்து பாத சாரிகள் மீது மோதியதால் மூவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கல்லடிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்றது.

இந்த விபத்தில் படுகாயமடைந் தவர்களில் ஒருவர் உயிரிழுந்தார். இருவர் காயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஊறணிப் பகுதி யில் உறவினர் வீட்டில் இருந்து ஆரையம்பதி நோக்கிச் சென்ற இந்தக் கார் கட்டுப்பாட்டை இழுந்து வீதியோரம் நின்றவர்களை மோதித் தள்ளியது. இதில் மூவர் படுகாய மடைந்தனர். அதில் ஒருவர் உயி ரிழுந்தார். உயிரிழுந்தவர் வயது 72 உடையவர். (ஐ)

## தேசிய கல்விக் கொள்கை விரைவில் வெளியிடப்படும்

கொழும்பு, ஜன. 04

தேசிய கல்விக் கொள்கையை விரைவில் வெளியிடுவதற்கு நட வடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்வித் துறையில் காணப் படும் ஏற்றத்தாழ்வுகள் காரண மாக பிள்ளைகளைப் பாடசாலை களுக்கு சேர்ப்பதில் போட்டித் தன்மை நிலவுவதாகவும் இதன் போது அவர் சுட்டிக்காட்டினார்.

## தினேஸ் குணவர்தன இந்தியா பயணம்



கொழும்பு, ஜன. 04

வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஸ் குணவர் தன இந்தியாவுக்கான இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ விஜ யமொன்றை மேற்கொள்ள வுள்ளார்.


இந்த மாதம் 9ஆம், 10ஆம் திகதியே இவர் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். இவர் அமைச்சராகப் பதவியேற்ற தன் பின்னர் செல்லும் முதலா வது வெளிநாட்டு விஜயம் இது வாகும். (ஐ)

## ஐஸ் பேதைப்பொருளுடன் இருவர் முல்லையில் கைது

முல்லைத்தீவு, ஜன. 04

முல்லைத்தீவில் ஐஸ் பேதைப்பொருளு டன் இருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு தெற்குப் பகுதியில் 430 கிராம் ஐஸ் போதைப்பொரு ளைத் தம்வசம் வைத்திருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளனர்.



கைது செய் யப்பட்டவர் களிடம் விசார ணைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என முல்லைத்தீவுப் பொலி ஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக் காலமாக இவ்வாறான போதைப்பொருள் கள் கைப்பற்றப்படும் சம்பவங்கள் அதி கரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

மாநகர சபை புதிய கடைத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.01.2020 இல் வெளியிடப்பெற்றது.